பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikathir

விழியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 09 சனிக்கிழமை 23.03.2019 கதிர் 139

இனி இது ரகசியம் அல்ல!

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் சில விடயங்களை இலங்கை நிறைவு செய்வதாயின் அரசமைப்பில் மாற்றம் செய்ய வேண்டும், சில ஷரத்துக்களை முற்றாக மாற்றியமைக்க வேண்டும் என்றெல்லாம் தென்னிலங்கையாலும் பக்கம் 02 »

# சர்வதேச நீதிப் பொறிக்குள் அரசைச் சிக்க வைப்போம்!



## ஜெனீவாவில் இருந்து திரும்பிய கையோடு சபையில் சுமந்திரன் எம்.பி. எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 23

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு இலங்கை அரசு மூன்றாவது முறை இணை அனுசரணை வழங்கியுள்ளது. தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை அரசு தவறும் பட்சத்தில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துவதற்கு அல்லது முழுமையான சர்வதேச நீதிப் பொறி முறையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

– இவ்வாறு நேற்று நாடாளுமன்றத்தில் அரசுக்குக் கடும் தொனியில் எச்சரிக்கை விடுத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன். பக்கம் 11 »

## மீண்டும் தேசிய அரசு தயாராகிறார் ரனில்!

### மைத்திரிபால பச்சைக்கொடி

கொழும்பு, மார்ச் 23

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒரு பகுதியினரைச் சேர்த்துக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் பக்கம் 11 »

## கோட்டாவைத் தமிழர் ஆதரிக்கமாட்டார்கள்!

### அடித்துக் கூறுகிறார் ரஞ்சன்



கொழும்பு, மார்ச் 23

தமிழ் மக்களின் ஆதரவு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோட்டாபய ராஜபக்ஷவுக்குக் கிடையாது என இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராம பக்கம் 11 »

## புத்தளத்தில் மைத்திரிக்கு நேற்றுக் கடும் எதிர்ப்பு!

### போராட்டக்காரர்கள் மீது பொலிஸார் தடியடி



கொழும்பு, மார்ச் 23

கொழும்பு குப்பைகளைப் புத்தளத்தில் கொட்டும் விவகாரம் தொடர்பில், ஜனாதிபதியை சந்திப்பதற்கு வாய்ப்பளிக்குமாறு கோரி, நேற்றுப் பக்கம் 02 »

## மாரப்பனவின் ஜெனீவா உரைக்கு பிரதமர் ரனில் நேற்றுப் பாராட்டு!



கொழும்பு, மார்ச் 23

சர்வதேச நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற பொறிமுறையை ஜெனீவாத் தொடரில் நிராகரித்ததன் மூலம் இலங்கையின் சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது பக்கம் 11 »

## சு.க. உறுப்பினர்களுக்கு ஜனாதிபதி வாய்ப்பூட்டு

கொழும்பு, மார்ச் 23

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் குறித்தோ அல்லது ஜனாதிபதி வேட்பாளர் குறித்தோ ஸ்ரீலங்கா பக்கம் 11 »

## நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட ஐ.தே.க. பச்சைக்கொடி!

### பங்காளிக்கட்சிகளுடன் கலந்துரையாடவும் முடிவு

கொழும்பு, மார்ச் 23

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு ஆதரவளிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி நேற்று அறிவித்துள்ளது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பக்கம் 11 »

### யழ்ப்பாணத்தில் இடம்பெற்ற

## இரு வேறு விபத்துக்களில் நேற்று இரண்டு பேர் சாவு!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரு வேறு விபத்துக்களில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இளைஞர் ஒருவரும் வயோதிபர் பக்கம் 11 »

## ஒன்பது மாவட்டங்களில் இன்று கடும் வெப்பம்!

கொழும்பு, மார்ச் 23

நாட்டில் 9 மாவட்டங்களில் இன்று கடும் வெப்பத்துடனான காலநிலை நிலவும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

இதன்படி, மன்னார், கிளிநொச்சி,முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, புத்தளம், குருநாகல், பக்கம் 11 »

## சு.கவின் பொதுச் செயலர் இன்று யாழ். வருகின்றார்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 23

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக அண்மையில் பதவியேற்ற பின்னர் முதற் தடவையாக யாழ்ப்பாணத்துக்கு இன்று பயணம் மேற்கொள்கிறார் தயாசிறி ஜயசேகர.

கட்சி மறுசீரமைப்புச் செயற் பக்கம் 11 »

## சீனாவிடமிருந்து இலங்கைக்கு 99 கோடி டொலர் கடன் உதவி

### உடன்படிக்கை நேற்று கைச்சாத்து



கொழும்பு, மார்ச் 23

மத்தியஅதிவேகநெடுஞ் சாலைத் திட்டத்துக்காக, 99 கோடி டொலர் இலகு கடனை வழங்கும் உடன்பாட்டில் சீனாவும், இலங்கையும்நேற்றுக்கையெழுத்திட்டுள்ளன. பக்கம் 11 »

## யாழ்.நகரில் பயணித்த ஓட்டோ திடீரெனத் தீப்பற்றி எரிந்தது!

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்ப்பாணம் நகரில் பயணித்துக்கொண்டிருந்த ஓட்டோ திடீரெனத் தீப் பற்றி எரிந்தது. சாரதி தனது ஆசனத்துக்கு கீழ் வைத்திருந்த பெற்றோல் போத்தல், பற்றரியுடன் மோதுண்ட நிலையில் இந்தத் தீ விபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. பக்கம் 11 »

## வலி. வடக்கில் கடற்படைக்கு காணி; கைவிடப்பட்டது அளவீட்டுப் பணி

யாழ்ப்பாணம், மார்ச் 23

வலி.வடக்கில் கடற்படை முகாமுக்காக 232 ஏக்கர் காணியை சுவீகரிப்பதற்கான அளவீட்டுப் பணி நேற்றுக் கைவிடப்பட்டது.

நில அளவீட்டுத் திணைக்களத்தால் நேற்றுக் காணி அளவீட்டுப் பணி மேற்கொள்ளப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டதை அடுத்து அங்கு கீரிமலை, பக்கம் 02 »

விளம்பரம் மற்றும் செய்தி தொடர்பு
kalaikkathirnews@gmail.com
https://kalaikathir.online

காலைக்கதிர் Kalaikathir



# இலங்கைக்கு தொடர்ந்தும் ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை

## பிரிட்டன் தூதுவர் கூறுகிறார்

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறிய பின்னரும், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை தொடர்ந்து வழங்கப்படும் என்று, பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ் தெரிவித்துள்ளார். கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த பொருளாதார மாநாடு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரிட்டன் வெளியேறினாலும், இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகை உள்ளிட்ட தீர்வை விலக்குகள் அளிக்கப்படும். அமெரிக்காவுக்கு அடுத்ததாக, இலங்கையின் ஏற்றுமதிச் சந்தையில் இரண்டாவது மிகப் பெரிய நாடாக பிரிட்டனே இருக்கிறது – என்றார். (ஐ)

## புத்தளத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புத்தளத்தில் கறுப்புக் கொடி போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாட்டுக்காக ஒன்றிணைவோம் புத்தளம் மாவட்டத்துக்கான செயற்திட்டதின் நிறைவு விழா மற்றும் புத்தளத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள விளையாட்டு மைதானம் மற்றும் கேட்போர் கூடம் என்பவற்றை திறந்து வைக்கும் நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, நேற்று வெள்ளிக்கிழமை புத்தளம் நகருக்கு விஜயம் செய்தார்.

கொழும்பு குப்பைகளைப் புத்தளத்தில் கொட்டும் அரசாங்கத்தின் திட்டத்தை உடனடியாக கைவிட வேண்டும் எனக் கோரி புத்தளத்தில் நீண்ட காலமாக மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த விடயத்தில் ஜனாதிபதியை நேரில் சந்தித்து கலந்துரையாடுவதற்கு சர்வமதக் குழு மற்றும் க்ளீன் புத்தளம் அமைப்பினருக்குச் சந்தர்ப்பம் பெற்றுக்கொடுக்குமாறு தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், அந்தக் கோரிக்கை இதுவரை நிறைவேற்றப்படவில்லை என்பதை கண்டித்தும், இன்றைய தினம் புத்தளத்திற்கு விஜயம் செய்யும் ஜனாதிபதியை சந்திப்பதற்கு சர்வமதக் குழு உள்ளிட்டோருக்குச் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொடுக்குமாறும் கோரியே இந்த கறுப்புக் கொடி கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இந்த கவனயீர்ப்பு போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்துகொண்டனர்.

புத்தளம் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் , காலை 8.30 மணிக்கு ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள், குப்பைக்கு எதிரான பல வாசகங்கள் எழுதப்பட்ட சுலோகங்களையும் ஏந்தியவாறு, குப்பைக்கு எதிரான கோஷங்களை எழுப்பியவாறு கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதன்போது, ஸ்மார்ட் ஸ்ரீ லங்கா வேலைத்திட்டத்தை புத்தளம் பிரதேச செயலகத்தில் ஆரம்பித்துவைப்பதற்காக ஜனாதிபதி வருகை தரவிருந்த பிரதேச செயலகத்தை நோக்கி ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முற்பட்டபோது, அதனை பொலிஸார் தடுத்து நிறுத்தினர்.

இதனால் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டதுடன், அங்கு பதற்ற நிலை காணப்பட்டது. விசேட அதிரடிப்படை, கலகம் தடுக்கும் பொலிஸாரும், நீர்த்தாரை பீச்சும் கவச வாகனமும் தயார் நிலையில் இருந்தனர். அத்துடன், புத்தளம் நகரில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

புத்தளம் பொலிஸார், இந்தப் போராட்டக்காரர்களைத் தடுத்து நிறுத்துவதற்காக, புத்தளம் நீதிமன்றத்தினால் பெற்றுக்கொண்ட தடையுத்தரவை பொலிஸார் ஆர்ப்பாட்டக்காரர்களிடம் தெரிவித்தனர். எனினும், குறித்த போராட்டம் அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, ஆர்ப்பாட்டக்காரர்கள் புத்தளம் பிரதேச செயலகத்திற்கு செல்லவதை பொலிஸார் தடுத்து நிறுத்தியபோது, ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கிருந்து கலைந்து சென்று புத்தளம் பஸ் நிலையத்துக்கு முன்பாக திறந்து வைக்கப்படவிருந்த விளையாட்டு மைதானம்வரை நடந்துசென்றனர்.

புத்தளம் நகர விளையாட்டு மைதானத்திற்கு அருகில் ஒன்றுகூடிய ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கும் குப்பைக்கு எதிரான சுலோகங்களை ஏந்தியவாறு, கோஷங்களையும் எழுப்பிக்கொண்டு கவனயீர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது அங்கும் அமைதியின்மை ஏற்பட்டது. இதனால், குறித்தவிளையாட்டுமைதானத்தை திறந்து வைப்பதற்காக ஜனாதிபதி கலந்துகொள்ள இருந்தபோதிலும் அங்கு ஏற்பட்ட அமைதியின்மையால், விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, புத்தளம் நகர பிதா கே.ஏ.பாயிஸ் உள்ளிட்டோர் குறித்த விளையாட்டு மைதானத்தை திறந்துவைத்தனர்.

இதன்போது, குப்பை பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதற்காக சமயத் தலைவர்கள் உள்ளிட்ட ஐந்து பேர் அடங்கிய குழுவொன்றுக்கு சக்தி விளையாட்டு மைதானத்தில் வைத்து சந்திப்பதற்காக அனுமதி பெற்றுத் தருவதாக ஜனாதிபதி செயலக அதிகாரியொருவர் வாக்குறுதி வழங்கிய போதிலும் இறுதி நேரத்தில் அந்த சந்திப்பு இடம்பெறவில்லை.

இதேவேளை, நாட்டுக்காக ஒன்றிணைவோம் புத்தளம் மாவட்டத்துக்கான செயற்திட்டதின் பிரதான நிகழ்வு புத்தளம் சக்தி விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துகொண்டுள்ளார் என்பதை அறிந்துகொண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள், கறுப்புக் கொடிகளை ஏந்திக்கொண்டு புத்தளம் பஸ் நிலையத்திலிருந்து சக்தி விளையாட்டு மைதானத்திற்கு முன்பாக செல்ல முற்பட்டனர்.

சக்தி விளையாட்டு மைதானத்தைச் சுற்றி பலத்த பொலிஸ், விசேட அதிரடிப்படையினர் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டிருந்ததுடன், அந்த மைதானத்திற்கு செல்லும் சேர்விஸ் வீதியிலும் பெருமளவு பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

இதன்போது, சக்தி விளையாட்டு மைதானத்திற்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் செல்ல முற்பட்டபோது, அவர்களை அங்கு செல்ல விடாது, பொலிஸாரும், கலகம் தடுக்கும் பொலிஸாரும் தடுத்து நிறுத்தினர். இதன்போது, அங்கும் அமைதியின்மை ஏற்பட்டது.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆண்கள், பெண்கள் மீது, பொலிஸார் தடியடி பிரயோகம் மேற்கொண்டனர்.

இந்த தடியடிப் பிரயோகத்தினால் ஆண்கள், பெண்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இரண்டு இளைஞர்களும் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சித்தரப்பினாலும் கூறப்படும் சல்ஜாப்புக் காரணங்களுக்குச் சரியான பதிலடி கொடுத்திருக்கின்றார் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி.

யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் பொறுப்புக் கூறலை நிலைநாட்டுவதற்காக சர்வதேச நீதிபதிகள், புலன் விசாரணையாளர்கள், நிபுணர்கள் தொடர்புபட்ட விசாரணை பொறிமுறை அவசியம் என்று ஜெனீவாவில் 2015 செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட – இலங்கை தொடர்பான – 30/01 தீர்மானத்தில் விவரிக்கப்பட்டிருந்தது.

அச்சமயத்தில் இலங்கை நிலைவரம் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையிலும், இலங்கை தொடர்பான விடயங்களை விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்க அவரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் தருஸ்மன் அறிக்கையிலும், இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரிப்பதற்கு சர்வதேச நீதிபதிகளையும் கொண்ட ஒரு கலப்புப் பொறிமுறை (Hybrid) அமைக்கப்பட வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டிருந்தது.

அதனையே இலங்கை தொடர்பான 30/01 தீர்மானமும் விவரித்திருந்தது; பிரதிபலித்திருந்தது.

அப்போது இலங்கைக்கு எதிராகக் கிளர்ந்த சர்வதேச அழுத்தத்தைச் சமாளித்து, அந்தச் சூட்டைத் தணிப்பதற்காக இலங்கை தொடர்பான அத்தீர்மானத்தைத் தானும் சேர்ந்து, அனுசரணைப் பணி வகித்து, ஏகமனதாக நிறைவேற்றியதாகக் காட்டிக் கொண்டது இலங்கை.

அப்படித் தானும் சேர்ந்து அத் தீர்மானத்தை நிறைவேற்றுவதாக சர்வதேச மட்டத்தில் ஒப்புக் கொண்டு, அதில் ஒப்பமிட்ட இலங்கைத் தரப்பு –

இப்போது நாட்டிற்குத் திரும்பியதும், அப்படி ஒப்புக் கொண்ட விடயத்தை நடைமுறைப்படுத்துவதாயின் அதற்கு அரசமைப்புத் திருத்தம் செய்யப்படவேண்டும், அரசமைப்பைத் திருத்துவதாயின் அதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவு தேவை, அது இல்லாதமையால் அப்படி ஒப்புக் கொண்ட விடயத்தை நிறைவு செய்ய முடியாது என்றெல்லாம் இப்போது கையை விரிக்கின்றது.

அரசமைப்பைத் திருத்தாமல் அந்தத் தீர்மானத்தில் கூறப்பட்ட விடயங்களை நிறைவு செய்ய முடியாது என்றால், அதனை அந்தத் தீர்மானத்தில் ஒப்பமிட முன்னர் – அந்தத் தீர்மானம் பிரேரணை வடிவத்தில் வந்த போது – அல்லவா இலங்கை பகிரங்கமாகத் தெரிவித்திருக்க வேண்டும்?

2015 செப்ரெம்பரில் 30/01 தீர்மானத்திலும், பின்னர் 2017 ஒக்ரோபரில் 34/01 தீர்மானத்திலும், அதற்குப் பிறகு இப்போது 40/01 தீர்மானத்திலும், அதே வாசகங்கள் கூறப்பட்டிருக்கையில் ஒவ்வொரு தடவையும் அந்தத் தீர்மானத்தைத் தானும் சேர்ந்து ஏற்றுக் கொண்டு, அனுசரணைப் பணி வகித்து, ஏகமனதாகக் கொண்டு வந்து நிறைவேற்றிய பின்னர் –

திரும்பவும் வந்து அதில் இருக்கும் விடயங்களை நிறைவு செய்ய எமது நாட்டின் அரசமைப்பு விடாது என்று சல்ஜாப்புக் கூறுவதை சர்வதேச சமூகம் தொடர்ந்து ஏற்றுக்கொண்டிருக்குமா என்பதே கேள்வி.

இலங்கையால் செய்ய முடியாததை – சட்ட ரீதியாகச் செய்வதற்கு இலங்கையின் அரசமைப்பு அனுமதிக்காத ஒரு விடயத்தை – இலங்கை செய்ய வேண்டும் என்று சர்வதேசம் கோருவதும் –

திரும்பத் திரும்ப அதே விடயத்தை – இலங்கையின் அரசமைப்பு செய்ய அனுமதிக்காது என்று கூறப்படும் விடயத்தை – இலங்கை செய்ய வேண்டும் என்று வற்புறுத்துவதும் நியாயமா என்ற ஒரு கேள்வியும் இது விடயத்தில் எழுகின்றது.

சர்வதேச நீதிபதிகள் இலங்கை விடயத்தை விசாரிப்பதில், இலங்கையில் சட்ட ரீதியான தடைகள், இக்கட்டுகள், முட்டுக்கட்டைகள் உள்ளனவா என்று இந்தச் சர்ச்சை 2015 செப்ரெம்பரில் ஜெனீவாவில் எழுப்பப்பட்ட போதே, ஜெனீவாவின் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் வட்டாரங்கள் தீர்க்கமாக ஆராய்ந்தன என்று அறிய வருகின்றது.

அமெரிக்காவில் இருந்து இரண்டு விசேட சட்ட நிபுணர்களைத் தருவித்து அது குறித்து விரிவாக ஆராய்ந்து ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்த பின்னரே, அந்தத் தீர்மானத்தில் எப்படி சர்வதேச நீதிபதிகளின் பங்களிப்புடன் அந்த நீதி விசாரணைப் பொறிமுறை அமைய வேண்டும் என்ற வாசகத்தை இலங்கை தொடர்பான தீர்மானத்தில் இடம் பெறச் செய்வதற்கான உறுதியான முடிவை கவுன்ஸில் வட்டாரங்கள் எடுத்தன என்றும் அறிய வந்தது.

அந்தப் பின்புலத்திலேயே இவ்விடயம் தொடர்பாக நேற்று நாடாளுமன்றத்தில் சில விடயங்களை சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

இலங்கையின் நீதிமன்றங்களில் வெளிநாட்டு நீதிபதிகள் கடமையாற்ற முடியாது, கடமையாற்றக் கூடாது என்ற எந்தச் சட்டக் கட்டுப்பாடும், விதிமுறைகளும் இலங்கையில் எந்தச் சட்டத்திலும் இல்லவே இல்லை என்பதை நேற்று நாடாளுமன்றத்தில் விவரித்து, இது விடயத்தில் நாட்டையும், மக்களையும் தவறாக வழிநடத்த முயலும் தென்னிலங்கைக் கட்சிகளுக்கும் தரப்புகளுக்கும் சாட்டையடி கொடுத்தார் அவர்.

வெளிநாட்டு நீதிபதிகள் தமது நாட்டு நீதிமன்றங்களில் பணி புரிய முடியாது என்ற சட்டக்கட்டுப்பாடு பாகிஸ்தான், இந்தியா போன்ற நாடுகளில் உள்ளன. ஆனால் அப்படிக் கட்டுப்பாடு ஏதும் இலங்கையில் இல்லை என்பதை விக்டர் ஐவன் எதிர் சரத் என் சில்வா வழக்கில் ஏழு நீதியரசர்களைக் கொண்ட உயர் நீதிமன்ற ஆயம் சுட்டிக்காட்டியுள்ளது என்பதை ஆதாரத்துடன் நாடாளுமன்றத்தில் அம்பலப்படுத்தினர் சுமந்திரன் எம்.பி.

இதேசமயம், பிரதம நீதியரசராக இருந்த ஷிராணி பண்டாரநாயக்கா சட்டவிரோதமான முறையில் பதவியில் இருந்து துரத்தப்பட்ட சம்பவம் நடந்தேறிய காலகட்டத்தில், இப்போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மிக நெருக்கமானவராகவும், நம்பிக்கைக்குரியவராகவும் இருக்கும் விஜேதாஸ ராஜபக்ஷ, அப்போது எதிரணியில் போய் இருந்தபடி, தனிநபர் பிரேரணை ஒன்றை முன்மொழிந்து கொண்டு வந்தார். அது, நீதிபதிகள், நீதியரசர்கள் போன்றோரின் நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்வதற்கான ஒரு நீதிக்கட்டமைப்பை உருவாக்குவதற்கு வழி செய்யும் சட்டமூலம்.

அந்தச் சட்டமூலத்தில், இந்நாட்டின் நீதிபதிகள், நீதியரசர்கள் போன்றோரின் நடத்தைகளை வெளிநாட்டு நீதிபதியைக் கொண்டு விசாரணை செய்வதற்கு வழி செய்யும் சட்ட வாசகங்கள் அடங்கியிருந்தன.

இலங்கையின் தற்போதைய அரசமைப்பின் கீழ் வெளிநாட்டு நீதிபதிகள் இங்குள்ள சட்ட விடயங்களை விசாரணை செய்ய முடியாது எனின், அந்தப் பிரேரணை வாயிலாக விஜேதாஸ ராஜபக்ஷ முன்வைத்த சட்ட மூலம் மட்டும் வெளிநாட்டு நீதிபதிகள் இங்கு வந்து விசாரணை செய்ய வழிவகுக்கும் ஏற்பாடு எப்படி இருந்திருக்க முடியும்? – என்று சுமந்திரன் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.

ஆக, ஒட்டு மொத்தத்தில் வெளிநாட்டு நீதிபதிகள், நீதியரசர்கள் இலங்கையில் வந்து, இலங்கை நீதித்துறையுடன் இணைந்து விசாரணைகளை நடத்தக் கூடாது என்ற தடையோ அல்லது நடத்தலாம் என்ற அனுமதியோ இலங்கையின் அரசமைப்பில் இல்லை. அந்த விடயம் இலங்கை அரசமைப்பில் திறந்த விவகாரமாகவே – தொடப்படாத விடயமாகவே – விடப்பட்டுள்ளது.

அப்படியானால், வெளிநாட்டு நீதியரசர்கள், நீதிபதிகள் இங்கு வந்து யுத்தக் குற்றங்களை குறித்து சுயாதீனமாக விசாரணை செய்வதற்கு தடையற்ற அனுமதி வழங்கப்படுகின்றது என்றே கருத வேண்டும். அதுதான் சரியானது.

சுமந்திரனின் சட்ட வாதம் மிக வலிமையானது. இந்தச் சட்டப் பிடியில் இருந்து நழுவுவதற்கு இலங்கை அரசுத் தரப்பின் காய் நகர்த்தல் எப்படி அமையப் போகின்றது? பொறுத்திருந்து பார்போமே...!

- மின்னல் -

## வலி.வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறைப் பகுதிகளில் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்காக மக்கள் நேற்றுத் தயாராக இருந்தனர்.

ஆயினும் காணி அளவீட்டுப் பணி நேற்று இடம்பெறவில்லை.

காணி அளவீட்டுப் பணி கைவிடப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் காணி அமைச்சர் கயந்த கருணாநாயக்க ஆகியோரினால் நேற்று முன்தினம் காலைதனக்கு அறிவிக்கப்பட்டது என்று கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

ஆயினும் இந்த அறிவிப்பு நில அளவைத் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாகக் கிடைக்கவில்லை எனவும், திட்டமிட்டபடி நேற்று காணி அளவீடு இடம்பெறும் எனவும் திணைக்கள வட்டாரங்கள் கூறின. ஆயினும் பின்னர் அது இடம்பெறவில்லை.

232 ஏக்கரில் பெரியளவிலான கடற்படை முகாமை அமைப்பதற்காக நகுலேஸ்வரம், காங்கேசன்துறை ஆகிய பகுதிகளில் நிலங்களைச் சுவீகரிப்பதற்கு நேற்று அளவீட்டுப் பணி இடம்பெறும் என நில அளவைகள் திணைக்களம் அறிவித்திருந்தது. (ஐ-07)

காலைக்கதிர்
Kalaikathir



# கிளிநொச்சி வைத்தியசாலையில் நேற்று முதல் கண் சத்திர சிகிச்சை

## புதிய விடுதியைத் திறந்துவைத்தார் அரச அதிபர்



கிளிநொச்சி, மார்ச் 23

கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையில் முதல் முறையாகக் கண் சத்திர சிகிச்சை விடுதி நேற்றுக் காலை ஒன்பது மணிக்கு கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் திறந்து வைக்கப்பட்டது.

மீள்குடியேற்றத்தின் பின்னர் வன்னிப் பெருநிலப் பரப்பில் அதிகளவினான மக்கள் கண்புரை நோய்க்கான சிகிச்சையைப் பெற வசதியின்றி இருந்ததைக் கருத்தில் கொண்டு மத்திய மற்றும் மாகாண சுகாதார அமைச்சுகள் விசேட கண் சத்திர சிகிச்சை முகாம்களை கிளிநொச்சி வைத்தியசாலையில் தொடர்ந்து நடத்தி ஆயிரக்கணக்கான மக்களுக்குப் பார்வையை வழங்கின.

இதற்கான விசேட கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் இலங்கையின் பல பாகங்களிலிம் இருந்து தொண்டு அடிப்படையில் வருகை தந்திருந்தனர்.

எனினும் தமது தனிப்பட்ட தொழில் சார் வணிக நலன்கள் கருதிச் செயற்படும் சிலரால் வழங்கப்பட்ட அழுத்தங்கள் மற்றும் தனிப்பட்ட நெருக்கடிகள் காரணமாக 2015ஆம் ஆண்டின் பின்னர் விசேட கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் கிளிநொச்சி வைத்தியசாலையில் கண் சத்திர சிகிச்சை முகாம்களை நடத்துவதற்கு வருகை தர மறுத்துவிட்டனர் எனக் கூறப்பட்டு வந்தது.

இதன் விளைவாக கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாகக் கிளிநொச்சி மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கண்புரை நோய் சத்திர சிகிச்சைக்கு தொலைவில் அமைந்திருக்கும் அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளை நாட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அவ்வாறு அரச வைத்தியசாலைகளுக்குச் செல்பவர்களும் கண் சத்திர சிகிச்சைக்குப் பாவிக்கப்படும் பஞ்சு முதற்கொண்டு வில்லைகள் வரை தனியார் நிலையங்களில் வாங்கி வரும்படி நிர்ப்பந்திக்கப்பட்டனர் என பொதுமக்கள் மத்தியில் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

அத்துடன் வடக்கு மாகாணத்தில் யாழ். போதனா வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளில் கடந்த சில வருடங்களாக விசேட கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் நியமிக்கப்படாமல் போனமைக்கும் மேற்படி சிலரது வணிக நலன் கருதிய திட்டமிட்ட வேலைகளே காரணம் எனச் சுகாதார திணைக்களத் தகவல்கள் சுட்டிக்காட்டியிருந்தன

இந் நிலையில் கிளிநொச்சி மாவட்டப் பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் காண்டீபன் சுகாதார அமைச்சின் உயர் அதிகாரிகளுக்குப் பொதுமக்களது அவலங்களைத் தொடர்ச்சியாக ஆதாரங்களுடன் எடுத்துக்கூறி அழுத்தம் கொடுத்து வந்ததன் பலனாக விசேட கண் சத்திர சிகிச்சை நிபுணர் கிரிதரன் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அண்மையில் நியமனம் செய்யப்பட்டார். இதனையடுத்தே நேற்று புதிய விடுதி திறந்து வைக்கப்பட்டு கண் சத்திர சிகிச்சைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தற்போது காணப்படும் தரவுகளின் பிரகாரம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கண்புரை நீக்கச் சத்திர சிகிச்சைக்கான காத்திருப்போர் பட்டியலில் உள்ளனர் எனத் தெரியவருகிறது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் காண்டீபன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சி. திருவாகரன், சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ. கேதீஸ்வரன், யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி மற்றும் வைத்தியர்கள், தாதியர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ஐ)

# தமிழரின் பாதிப்பை சர்வதேசம் புரிந்துகொள்ளத் தவறிவிட்டது

## ஜெனீவாவில் சிவாஜிலிங்கம் ஆதங்கம்

ஜெனீவா, மார்ச் 23

இலங்கையில் பாதிக்கப்பட்டது தமிழர் தரப்பு என்பதைப் பல நாடுகள் ஜெனீவாவில் குறிப்பிடத் தவறியுள்ளன என வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் இலங்கை மீதான தீர்மானம் வாக்கெடுப்பு இல்லாமல் நிறைவேறியது.

இதுகுறித்து ஜெனீவாவில் வைத்து கருத்து வெளியிடும்போதே சிவாஜிலிங்கம் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்



திற்கு எடுத்துச் செல்ல வேண்டும் என்ற ஆணித்தரமான தீர்மானத்தை எவரும் திட்டவட்டமாக தெரிவிக்கவில்லை.

ஆனால் அதனை நோக்கிச் செல்ல முடியும் என்ற கருத்துப்பட ஒரு சில நாடுகள் குறிப்பிட்டுள்ளன. அத்துடன், இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு நாம் நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம் என்றார். (ஐ)

# போயா தினத்தில் மதுபானம் விற்பனை செய்த நபர் கைது

வவுனியா, மார்ச் 23

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் போயா தினமான கடந்த புதன் கிழமை மதுபான விற்பனையில் ஈடுபட்ட நபர் ஒருவரைக் கைது செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

போயா தினமான கடந்த புதன் கிழமை வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர அபேய விக்கிரம தலைமையின் கீழ் செயற்படும் புலனாய்வுப் பிரிவினருடன், போதை ஒழிப்புப் பிரிவினர் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது இறம்பைக்குளம் பகுதியில் 17 முழுப் போத்தல், 9 கால் போத்தல் மதுபானத்தைக் கைப்பற்றியதுடன் 40 வயதுடைய நபர் ஒருவரையும் கைது செய்தனர். (ஐ - 100)

# தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை தமிழர்களுக்கு பெரும் பின்னடைவு

## கஜேந்திரகுமார் ஜெனீவாவில் தெரிவிப்பு

ஜெனீவா, மார்ச் 23

இலங்கை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமையானது, நேரடியாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

இந்த நிலைமைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பொறுப்பேற்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இது குறித்து ஜெனீவாவில் கருத்து வெளியிட்ட அவர்,

இரண்டு வருடங்களுக்கு பிரியோசனம் இல்லாத ஒரு சபைக்குள் பாதிக்கப்பட்டுள்ள நாம் முடக்கப்பட்டுள்ளோம்.

கடந்த இரண்டு வருடங்களாக வீதியில் போராடிவரும் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு இதுவொரு பெரும் பின்னடைவு. எமது மக்களை ஏமாற்றும் வகையில் இது கொண்டு வரப்பட்டுள்ளது – என்றார். (ஐ)

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றுக்கு செல்வதுதான் இப்போதுள்ள இலக்கு

## கூறுகிறார் சட்டத்தரணி சுகாஸ்

ஜெனீவா, மார்ச் 23

சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கு இலங்கைப் பிரச்சினை கொண்டு செல்லப்பட்டு அங்கு சுயாதீனமான, நீதியான விசாரணை இடம்பெற வேண்டும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் சட்டத்தரணி சுகாஸ் கனகரட்ணம் தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் கூட்ட தொடரில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நா மனித உரிமை கவுன்ஸிலில் அழுத்தம் கொடுக்க எந்த நாட்டுக்கும் அதிகாரம் கிடையாது. ஆகையால் அங்கு மீண்டும் மீண்டும் தமிழர்களின் பிரச்சினையை முன்வைத்து பாதிக்கப்பட்ட தரப்பை மேலும், பாதிப்புக்கு உள்ளாக்க வேண்டாம்.

சர்வதேச நீதிமன்றத்துக்குச் சென்று குற்றமிழைத்த தரப்புக்கு தண்டனையும், பாதிக்கப்பட்ட தரப்புக்கு நியாயத்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# ‘வீட்டுத்திட்டக் கடனிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்’

வவுனியா பாரதிபுரத்தில் வீட்டுத்திட்டத்துக்கான நிதி வழங்கப்படாமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. பாரதிபுரம் பலநோக்கு மண்டபத்துக்கு முன்னால் இந்த ஆர்ப்பாட்டம் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா பாரதிபுரத்தில் 2018ஆம் ஆண்டு வழங்கப்பட்ட 146 வீடுகளுக்கான அடிக்கல் நடப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

இந்நிலையில் தற்போது இந்த வீட்டுத் திட்டங்களுக்கான நிதிசீரான முறையில் வழங்கப்படவில்லை. அதன் காரணமாகவே இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்ததாக மக்கள் தெரிவித்தனர்.

இதன் போது 'வீடமைப்பு அதிகார சபையே நுண்கடன் போல் பாதிக்கப்பட்டோம் உன் வீட்டுத் திட்டத்தால்', 'சஜித் அமைச்சரே வீட்டுத்திட்டக் கடனிலிருந்து எங்களைக் காப்பாற்றுங்கள்' போன்ற பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான ஒவ்வொரு வீட்டுக்கும் கட்டம் கட்டமாக நிதி வழங்கப்பட்டு வருகின்ற நிலையில், கடந்த வருடத்திலிருந்து அடுத்த கட்ட நிதிகள் வழங்கப்படாமையால், தமது வீட்டைத் தொடர்ந்தும் கட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர். (ஐ)



வவுனியாவில் ஆர்ப்பாட்டம்

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

# ஜெனீவாத் தீர்மானத்தின்படி இலங்கை செயற்படவேண்டும்

'விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டவில்லை' என்ற மாதிரிப் பேசுகின்றார் இலங்கை அரசுத் தரப்பின் பிரதிநிதியாக ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் கலந்து கொண்ட சரத் அமுனுகம எம்.பி.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் விசேட பிரதிநிதியாக அவர் இந்தக் கூட்டத் தொடரில் பங்குபற்றும் இலங்கை அரசுத் தரப்பு அணியில் இணைத்துக் கொள்ளப்பட்டார் என்பது தெரிந்ததே.

ஜெனீவா கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக தற்போது நிறைவேற்றப்பட்ட - 40/I இலக்கத்தைக் கொண்ட - புதிய தீர்மானத்தை இலங்கையும் சேர்ந்து அனுசரணைப் பணி வகித்து, ஏற்றுக் கொண்டாலும், இலங்கை விவகாரம் தொடர்பில் கலப்பு நீதிமன்ற முறைமையை இலங்கை ஏற்றுக் கொள்ளவில்லை எனப் புதுக்கதை அவிழ்த்து விட்டிருக்கின்றார் அவர்.

ஜெனீவா விவகாரத்தில் சர்வதேசப் பொறிவலைக்குள் சிக்குப்பட்டு விட்ட இலங்கைத் தரப்பின் நிலைமையை - இக்கட்டை - மூடி மறைப்பதன் மூலம், மக்கள் மத்தியில் - வாக்காளர் மத்தியில் - தாங்களுக்கு எதிராக எழக்கூடிய சீற்றத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக இப்படி உண்மைக்கு மாறாகக் கதை விடுகின்றார் அவர்.

ஏற்கனவே ஜெனீவாவில் 2015 செப்ரெம்பரில் நிறைவேற்றப்பட்ட 30/I இலக்கத் தீர்மானம், 2017 மார்ச்சில் நிறைவேற்றப்பட்ட 34/01 இலக்கத் தீர்மானம் ஆகியவற்றின் தொடர்ச்சியாகவே இப்போது 40/01 தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது.

ஏற்கனவே 30/01 தீர்மானம் மற்றும் 34/01 தீர்மானங்களில் கலப்பு நீதிப் பொறிமுறை குறித்து தெளிவாகவும், திட்டவட்டமாகவும் கோடி காட்டப்பட்டிருக்கின்றது. அதுவே இப்போதைய 40/01 தீர்மானத்தின் மூலமாகவும் அடிப்படையாகவும் உள்ளது.

எனவே, தற்போதைய தீர்மானத்தின் மூலமும் சர்வதேசப் பங்களிப்புடனான கலப்பு நீதிப் பொறிமுறைக்கு இலங்கையும் சேர்ந்து இணங்கி ஒப்புக் கொண்டுள்ளதாகவே அர்த்தம்.

ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பான தற்போதைய தீர்மானத்துக்கு இலங்கை தானே முன்னின்று அனுசரணைப் பணி வகித்து, அதை ஏகமனதாக நிறைவேற்றச் செய்தமை மூலம் சர்வதேச சமூகத்தைத் தற்காலிகமாக தாஜா செய்து அதன் சீற்றத்தை - எதிர்ப்பை - தணிக்கச் செய்திருக்கின்றது என்று கொள்ளலாம்.

அதேசமயம், மறுபுறத்தில் அந்தத் தீர்மானத்தில், யுத்தத்தின் இறுதிச் கட்டத்தில் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள், மனித மாண்புகளுக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பிலான நீதி விசாரணையில் சர்வதேசத்தின் பங்களிப்புடன் கூடிய கலப்புப் பொறிமுறை இருக்காது என்று முழுப் பூசணிக்காயை சோற்றில் மறைப்பதன் மூலம் தென்னிலங்கைச் சிங்களவர்களையும், பேரினவாதிகளையும் தாஜா செய்து தணிவிக்கவும் இலங்கைத் தரப்பு முயல்கின்றது என்பது தெளிவாகின்றது.

எது, எப்படியென்றாலும், இந்தத் தீர்மானங்களில் கூறப்பட்ட விடயங்களை - கலப்புப் பொறிமுறை உட்பட பொறுப்புக் கூறல், நீதியை நிலைநாட்டல், உண்மைகளைக் கண்டறிதல், மீள நிகழாமையை உறுதிப்படுத்தல், இழப்பீடுகளை வழங்குதல் போன்றவற்றில் இலங்கை மெத்தனமாக நடக்க முயலுமானால் சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்று இலங்கை மீது பாயும். அதற்கான முயற்சிகளை நாமே முன்னின்று மேற்கொள்வோம் என்று கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் நேற்று நாடாளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட 30/01 மற்றும் 34/01 தீர்மானத்துக்கும் தற்போதைய தீர்மானத்துக்கும் இடையில் ஒரு சில மாற்றங்கள் மட் டுமே உண்டு.

தற்போதைய தீர்மானத்தின் முகவுரையில் இலங்கை தொடர்பான கடப்பாடுகள் ஒரு கால வரையறைக் கட்டமைப்புக்குள் நிறைவு செய்யப்பட வேண்டும் என்ற வாசகம் புதிதாகச் சேர்க்கப்பட்டதைத் தவிர வேறு மாற்றங்கள் இல்லை என்பதையும் நாம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

ஆகவே, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கு பிழையான அர்த்தங்களைக் கற்பித்து, விடயங்களை மூடி மறைத்து, தென்னிலங்கைச் சமூகத்தையும் சர்வதேசத்தையும் தவறாகவழி நடத்துவதை விடுத்து, நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி செயற்படுவதற்கு இலங்கை முன்வருவதே அதற்கும் நல்லது; நாட்டு மக்களுக்கும் நல்லது.

# இலங்கை இப்போது தனிமைப்பட்டுள்ளது

## தினேஷ் குணவர்தன குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 23

ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் நிலையில்லாத வெளிநாட்டுக் கொள்கையினால் பல உலக நாடுகள் இலங்கையை தனிமைப்படுத்தி உள்ளன என பொதுசன ஐக்கிய முன்னணி குற்றம் சுமத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணவர்தன, இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர்மேலும்தெரிவிக்கையில்-

ரணில் தலைமையிலான அரசு கடைபிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கைகளினால், நாடு பெரும் சாவால்களுக்கு உள்ளாகியுள்ளது. ஏற்கனவே இலங்கை தொடர்பான யோசனையை முன்வைத்த அமெரிக்கா இப்போது அந்த கவுன்ஸிலில் அங்கம் வகிப்பது இல்லை.

முன்பு எமக்கு ஆதரவாகச் செயற்பட்ட நாடுகள் ரணிலின் வெளிநாட்டுக்கொள்கையினால் தூரம்சென்றுள்ளன. வெளிநாட்டு நீதிபதிக்ளுக்கு இங்கு விசாரணைகளை நடத்த முடியாது.

. எனவே இந்த நாட்டுக்கு எதிரான பிரேரணையில் இருந்து முற்றாக விலகவேண்டும். இலங்கை போன்ற நாடுகளின் பிரச்சினைகளில் எவரும் குறுக்கிட வேண்டாம் அச்சுறுத்தவும் வேண்டாம்.

நேற்றுமுன்தினம் இலங்கைப் பிரதிநிதிகள் செயற்பட்டவிதம் வரவேற்கத்தக்கது என்றாலும் அது போதாது. வெளிவிவகார அமைச்சு இலங்கையின் கடமைகளைநிறைவேற்றுவது இல்லை. இதனை ஜனாதிபதியும் அறிந்துள்ளார் – என்றார். (ஐ)

# வீட்டுத்திட்டம் வழங்க கோரி முல்லைத்தீவில் கவனவீர்ப்பு




முல்லைத்தீவு, மார்ச் 23

வீட்டுத்திட்டத்தை விரைவில் வழங்குமாறு கோரி முல்லைத்தீவில் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்ட, துணுக்காய் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட உயிலங்குளம் 50 வீட்டுத்திட்ட மக்களே இந்தக் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

முல்லைத்தீவு சிறுவர் பூங்காவில் இருந்து பேரணியாக வந்த இந்த மக்கள் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு வழங்கப்பட்ட வீடுகள் உரிய தரத்தில் இல்லை என மாவட்ட அரச அதிபரால் அமைக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், தமக்கான வீடுகளை விரைவாக அமைத்துத் தரவேண்டும் என கோரி மக்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்கள் மாவட்ட அரச அதிபரைச் சந்தித்து கலந்துரையாடினர். (ஐ)

# தீர்மானத்துக்கு உடன்பட்டாலும் கலப்பு நீதிமன்றை ஏற்கவில்லை!

## கூறுகின்றார் சரத் அமுனுகம



ஜெனீவா, மார்ச் 23

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட புதிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டாலும், கலப்பு நீதிமன்றத்தை ஏற்கவில்லையென இலங்கை சார்பில் ஐ.நா. அமர்வில் பங்கேற்றுள்ள சரத் அமுனுகம எம்.பி. தெரிவித்தார்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது அமர்வு தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் நேற்றுமுன்தினம் பிரிட்டன் உள்ளிட்ட நாடுகளின் அனுசரணையில் இலங்கை மீதான 40/1 என்ற புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதன்பின்னர் கருத்துவெளியிடும்போதே சரத் அமுனுகம மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஐ.நாவில் கடந்த 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் நீடிப்பாகவே இந்த புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசு முன்னதாக உறுதியளித்த விடயங்களை நிறைவேற்றவே சர்வதேச சமூகம் மேலும் இரண்டு வருட கால அவகாசத்தை வழங்கியுள்ளது.

அடிப்படையில் இது ஒரு நல்லெண்ணச் சமிக்ஞை. அரசு ஏற்கனவே ஏற்றுக்கொண்ட விடயங்களைச் செயற்படுத்த மேலும் காலம் அவசியம்.

சர்வதேச நாடுகள் எம்மைக் குறை கூறியிருந்தபோதும், அதனை எவ்வாறு செயற்படுத்தப்போகிறோம் என்பது எமது நாட்டின் சூழ்நிலையிலேயே தங்கியுள்ளது – என்றார். (ஐ)

# 1,547 கிலோ பீடி இலைகளுடன் தலைமன்னாரில் மூவர் கைது!

மன்னார், மார்ச் 23

தலைமன்னாரில் ஆயிரத்து 547 கிலோ கிராம் பீடி சுற்றும் இலைகளுடன் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனக் கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையினர் நேற்று மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது அவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

41 பொதிகளாக பீடி சுற்றும் இலைகள் கடத்தி வரப்பட்டன என்றும் இந்தியாவிலிருந்து இவை கடத்திவரப்பட்டிருக்கலாம் என்றும் கடற்படை சந்தேகம் வெளியிட்டுள்ளது.


சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

## நாளை

24.03.2019
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம்: சுவாதி சித்தம் மு.ப.11.48 வரை.
திதி : சதுர்த்தி பி.இ. 01.43 வரை.
இராகுகாலம் : 04.46 – 06.16
சுப நேரம் : 09.16 – 10.46

# மின் தடை



யாழ்ப்பாணம்மார்ச்23

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை –

**யாழ் பிரதேசத்தில் -**

சுன்னாகம் சிவன் கோவிலடி பிரதேசம், சூறாவத்தை மயிலங்காடு, குப்பிளான், ஏழாலை, கட்டுவன், ஊரெழு, சுன்னாகம் இலங்கை தொலைத்தொடர்பு நிலையம், மருதனார்மடம், ரொட்டியாலடி, அம்பலவாணர் வீதி , பெரியமதவடி, இலங்கை வங்கி முன் ஒழுங்கை, மருதனார்மடம் – யாழ் நுண்கலைப் பீடம், மாசியப்பிட்டி, பெருமாள்கடவை, ஆலங்குலாய் சண்டிலிப்பாய், கந்தரோடை, உடுவில் ஆர்க் வீதி ஆகிய இடங்களிலும் –

**கிளிநொச்சி பிரதேசத்தில் –**

உப்புமாவெளி, அளம்பில், செம்மலை, நாயாறு, கொக்குத்தொடுவாய், கருநாட்டங்கேணி கொக்கிளாய், குமுழமுனையின் சில பகுதிகள் ஆகிய பிரதேசங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# போர்க் குற்ற விசாரணைக்கு கால அட்டவணை வேண்டும்

## வலியுறுத்துகின்றது பிரிட்டன்

ஜெனீவா, மார்ச் 23

மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், துன்புறுத்தல்கள், போர் குற்றங்கள் அனைத்தும் ஒரு கால அட்டவணைப்படி விசாரிக்கப்பட வேண்டும் என பிரிட்டன் வலியுறுத்தியுள்ளது.

ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸிலில் நேற்றுமுன்தினம் இலங்கை 40/1என்றதீர்மானம்வாக்கெடுப் பின்றி நிறைவேற்றப்பட்டது.

இதில் உரையாற்றியபோதே பிரிட்டன் பிரதிநிதி இவ்வாறு வலியுறுத்தினார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், இலங்கையில் யுத்தம் நிறைவடைந்து 10 வருடங்கள் நிறைவடைந்துள்ளன. இந்நிலையில் மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் துன்பறுத்தல்கள் போர் குற்றங்கள் அனைத்தும் ஒரு கால அட்டவணைப்படி விசாரிக்கப்பட வேண்டும்.

இதனை இலங்கை அரசு மிகவும் வேகமாக நிறைவேற்ற வேண்டும் – என்றார். (ஜ)

# ஐ.நாவைப் புரிந்து கொண்டு செயற்படவேண்டும் தமிழர்



## அருட்தந்தை இம்மானுவேல் கோரிக்கை

ஜெனீவா,மார்ச்23

ஐ.நா. சபையின் அமைப்பை புரிந்து கொண்டு, தமிழர்கள் செயற்படவேண்டும் என உலகத் தமிழர் பேரவையின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் வலியுறுத்தியுள்ளார்.

ஜெனீவாவில் வைத்து கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அரசியல் தீர்வு உள்ளிட்ட சில விடயங்களை பொறுமையாகத் தான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஜ)

# வவுனியாவில் பெண் கொலை; தொலைபேசி பகுப்பாய்வுக்கு!

வவுனியா, மார்ச் 23

வவுனியா – நெளுக்குளத்தில் கடந்த புதன் அதிகாலை வெட்டுக் காயங்களுடன் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட பெண்ணின் கையடக்கத் தொலைபேசியைப் புலனாய்வு பிரிவினருக்கு வழங்கிப் பகுப்பாய்வு செய்யுமாறு வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌான் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

வெட்டுக்காயங்களுடன் கிணற்றில் பெண்ணொருவர் சடலமாக கிடப்பதாகப் பொலிஸாருக்கு கிடைத்த முறைப்பாட்டையடுத்து சம்பவ இடத்துக்குச் சென்ற வவுனியா மற்றும் நெளுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது வீட்டின் அறையில் இரத்தம் காணப்பட்டதுடன் , கதவு மற்றும் கதவுப் பூட்டு போன்றவற்றிலும் இரத்த அடையாளமும் , பெண்ணின் கையடக்க தொலைபேசி , கத்தி , வீட்டின் அருகேயுள்ள பாழடைந்த கிணற்றிலிருந்துசடலம் ஆகியவற்றைப் பொலிஸார் பார்வையிட்டதுடன் குற்றத் தடயவியல் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்துக்கு விரைந்த குற்றத்தடயவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் கைரேகை அடையாளம் மற்றும் கிணற்றில் ஆழம், தடயங்கள் என்பவற்றை ஆய்வு செய்தனர்.

இந்தப் பெண்ணின் மரணத்தில் பொலிஸாருக்குப் பலத்த சந்தேகம் ஏற்பட்டமையால் வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌான் மற்றும் சட்ட வைத்திய அதிகாரி வைத்தியர் தம்மி லோபிஸ் லேவா ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து தடயங்கள் மற்றும்சடலத்தைப்பார்வையிட்டமையுடன் பெண்ணின் உறவினர்கள் மற்றும் அவரது பிள்ளைகளிடம் விசாரணைகளை மேற்கொண்டனர்.

சடலத்தைப் பார்வையிட்ட வவுனியா மாவட்ட நீதிமன்ற நீதிபதி தஸ்னீம் பௌான் குறித்த பெண்ணின் கையடக்க தொலைபேசியினை புலனாய்வுப் பிரிவினருக்கு வழங்கி தொலைபேசியில் உள்ள தகவல்களில் ஏதேனும் ஆதாரம் உள்ளதா என ஆராயுமாறு பொலிஸாருக்கு உத்தரவுபிறப்பித்ததுடன் சடலத்தைப் பிரேத பரிசோதனைகளுக்காக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லுமாறு உத்தரவு பிறப்பித்தார்.

சடலமாக மீட்கப்பட்டவர் 11 மற்றும் 5 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயார் கௌரி (வயது – 32) எனவும் இவரது கணவர் கடந்த சில நாட்களுக்கு முன்னரே வெளிநாடு சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




## அன்பின் வலி பிரிவிலே தான் உணரப்படும்

சொத்து குடும்பத்தை விட்டுப் பிரிக்கின்றது பாவம் இறைவனை விட்டு நம்மைப் பிரிக்கின்றது. அன்பற்ற நிலையே பாவம் செய்ய நம்மைத் தூண்டுகின்றது. குடும்பத்திலே தாய் தந்தை, சகோதரர்களை மன்னிக்க முடியாமல் இருக்கின்றோம். பெற்று வளர்த்து ஆளாக்கியவர்களை வெறுத்து. பிரிந்து செல்கின்றவர்கள் எத்தனை பேர், வளர்த்து வழிகாட்டிய குடும்பத்துக்காக உழைத்த மூத்த சகோதரர்களை சிறு வார்த்தைப் பிரயோகங்களை வைத்துக் கொண்டு உறவில்லாமல் பகைமையிலே, நெடுங்காலங்கள் வாழ்கின்றவர்கள் எத்தனை பேர். இன்று இருந்து நாளை காய்ந்து தீய்ந்து போகும் புல்லைப் போன்ற நாம் வன்மம், வைராக்கியமாக வாழ்வதினால் வாழ்வு வந்து விடுவதில்லை. மாறாக நிம்மதியற்ற வாழ்வே நிகழ்வது உண்மை.

போலியாக வாழ்ந்து அன்பற்ற உறவுகளாக வாழாமல், மன்னிப்பே மாபெரும் மருந்து, மன்னிக்காமல் இறை மன்னிப்பைப் பெற முடியாது. சகோதரனை அன்பு செய்யாமல், சர்வ வல்லவரை அன்பு செய்ய முடியாது. இறை அன்பின் முன் சுவையே சகோதர அன்பு, கண்ணெதிரே தெரியும் எம் சகோதரர்களை அன்பு செய்யும் போது இறைவனையே அன்பு செய்கின்றோம். பிறரன்பின் மூலமாக இறையன்பைப் பெற்று வாழ்ந்திட, தவக்காலப் பயணம் பயனுள்ளதாகிட, மனக் கசப்புக்களை நீக்கி, மனமாற்றம் அடைந்து எம் வாழ்வைப் பயனுள்ள வாழ்வாக மாற்றிடுவோம்.

**அன்ரனிபீற்றர்**
(ஓய்வு நிலை ஆசிரிய ஆலோசகர்)

# நாடு முழுக்க பகலும், இரவும் சுழற்சி முறையில் மின்வெட்டு

## நீர் மின் உற்பத்தி வீழ்ச்சியால்

கொழும்பு, மார்ச் 23

நீர் மின் உற்பத்தி நிலையங்கள் அமைந்துள்ள இடங்களில் போதிய மழை இல்லாமை காரணமாக நாடு முழுவதும் சுழற்சி முறையிலான மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக மின் சக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்பிரகாரம் பகல் வேளையில் மூன்று மணிநேரமும் இரவு வேளை ஒரு மணி நேரமும் நாடு முழுவதும் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படும் என அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

லக்ஸபான, மேல் கொத்மலை நீர் உற்பத்தி நிலையங்கள் உள்ள பகுதிகளில் மழைவீழ்ச்சி போதுமானதாக இல்லை என்பதால் நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்பநிலையுடனான காலநிலையால் ஏற்பட்ட அதிகரித்த மின்பாவனையை ஈடு செய்ய முடியாதுள்ளதாக மின் சக்தி அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இதேவேளை, நீர் மின் உற்பத்தி நிலைய நீர் வீழ்ச்சிப் பகுதிகளில் செயற்கை மழையை உருவாக்கும் நடவடிக்கைகளையும் மின்சக்தி அமைச்சு முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ)

# நகரப் பகுதியில் விளம்பம் ஒட்டுவதற்கு யாழ். மேயர் தடை

யாழ்ப்பாணம், மார்ச் 23

யாழ்.நகரப் பகுதியில் பொது இடங்களில் விளம்பரங்களை ஒட்டுவதற்கு முற்றாகத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக யாழ்.மாநகர முதல்வர் இமானுவேல் ஆனல்ட் அறிவித்துள்ளார்.

யாழ்.மாநகர சபையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

தனியார் அல்லது அரச நிறுவனங்கள், அரசியல் சார்ந்த கட்சிகள், திரையரங்குகள், கல்வி நிறுவனங்கள் போன்ற எந்த நிறுவனங்களாக இருந்தாலும் அவர்கள் சார்ந்த விளம்பரங்களை பொது மக்களின் மதில்கள், சுவர்கள், அரச திணைக்களங்களில் சுவர்களிலோ, பொது இடங்களிலோ ஒட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

நிறுவனங்கள் அனைத்தும் இதுவரை காலமும் பொறுப்பற்ற விதத்தில் தாங்கள் நினைத்த படி மக்களின் சுவர்களில் பசைகளை பூசி விளம்பரங்களை ஒட்டி வந்தன.

இனிவரும் நாள்களில் இவ்வாறு யாழ். நகரத்தை அசுத்தப்படுத்த அனுமதிக்க முடியாது. சுத்தமான பசுமையான நகரை உருவாக்க இவ்வாறான அதிரடி நடவடிக்கைகளை மாநகர சபை மேற்கொள்ளும்.

முக்கியமாக தேர்தல் காலங்களிலும் இந்த நடவடிக்கை கடுமையான முறையில் அமுல்படுத்தப்படும். இவ்வாறு விளம்பரப்படுத்த தேவையானவர்கள் மாநகர சபையுடன் தொடர்பு கொண்டால் அதற்கேற்ற நடவடிக்கை சபையால் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் – என்றார். (ஜ-07)

# இலங்கையின் இறையாண்மையை சர்வதேசத்துக்காக இழத்தலாகாது

## கெஹலிய ரம்புக்வெல தெரிவிப்பு

சர்வதேசத்தின் உறவுகளுக்காக நாட்டின் இறையாண்மையை ஒருபோதும் விட்டுக் கொடுக்க முடியாது என எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்தபோதே இவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நல்லாட்சி அரசு சர்வதேசத்தின் மத்தியில் அடிபணிந்து சென்றமை வெட்கப்படவேண்டிய விடயமாகும்.

வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பனவின் மூலம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நிதியமைச்சர் மங்கள சமரவீர ஆகியோரது நோக்கங்கள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்படுகின்றன.

சர்வதேச நாடுகள் இலங்கைக்கு எதிராகத் தமது அதிருப்தியை வெளிப்படுத்தி



வருகின்றன. சர்வதேசத்தின் உறவுகளுக்காக நாட்டின் இறையாண்மையை ஒரு போதும் விட்டுக் கொடுக்க அனுமதிக்க முடியாது–என்றார். (ஜ)

# சீன இரசாயன ஆலையில் பெரும் வெடி விபத்து 47 பேர் பலி: 32 பேர் நிலைமை கவலைக்கிடம்

## மேலும் 58 பேர் ஆபத்து நிலையில்; நிலத்திலும் பெரும் அதிர்வு



சீனாவில் இரசாயன ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 47 ஆக அதிகரித்துள்ளது.

சீனாவின் கிழக்கு பகுதியில் உள்ள ஜியாங்க்சூ மாகாணத்தின் யான்செங் என்ற நகரில் செயல்பட்டு வந்த இரசாயன ஆலையில், நேற்று முன்தினம் உள்ளூர் நேரம் பிற்பகல் 2.50 மணியளவில் பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது.

உரப்பொருள்கள் தயாரிக்கும் இந்த தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிப்பை தொடர்ந்து அந்த இடத்தில் தீ பற்றி எரிந்தது. இதில் சிக்கிய தொழிலாலர்கள் 47 பேர் பலியாகினர். மேலும், 32 பேர் ஆபத்தான நிலையில் உள்ளனர் எனவும், 58 பேர் படுகாயம் அடைந்துள்ளனர் எனவும் உள்ளூர் ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.


தொழிற்சாலையில் இருந்து 88 பேர் பத்திரமாக மீட்கப்பட்டனர் என அவசர மேலாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இரசாயன ஆலையில் ஏற்பட்ட இந்த பெரும் வெடிவிபத்தால் அந்த நேரத்தில் அப்பகுதியில் 2.2 அளவுக்கு சமமான ஒரு நில அதிர்வு இருந்ததாக சீனாவின் பூகம்பம் கண்காணிப்பு தொடர்பான நிர்வாகக் குழு தெரிவித்துள்ளது.

இந்த வெடிவிபத்து சம்பவம் தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளியாகியுள்ள படங்களில், தொழிற்சாலை அமைந்துள்ள இடத்தில் இருந்து ஒரு தீப்பிழம்பு எழுவதும், அருகாமையில் உள்ள கட்டடங்கள் சேதமடைந்துள்ள காட்சிகளும் இடம் பெற்றுள்ளன. இரசாயன ஆலையில் ஏற்பட்ட வெடிவிபத்தால், வெளியாகியுள்ள நச்சுக் கசிவால், அருகாமையில் உள்ள மக்கள் உடல் நலம் பாதிக்கப்பட வாய்ப்பு உள்ளதாக இரசாயனவியல் நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வெடிவிபத்தில் பள்ளி செல்லும் குழந்தைகளும், சிறுவர்களும் சிக்கினர் என்று கூறப்படுகிறது.

வெடிவிபத்தினால் அருகிலுள்ள வீடுகளில் கதவு, ஜன்னல்களில் விரிசல் ஏற்பட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.





இந்த விபத்து குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2015 ஆம் ஆண்டு சீனாவில் தியாஜின் இரசாயன தொழிற்சாலையில் ஏற்பட்ட தொடர் வெடி விபத்தில் 165 பேர் பலியாகினர்.

கடந்த ஆண்டு சீனாவில் தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட இரசாயன வாயு வெளியேற்றத்தில் 23 பேர் பலியாகினர்.

# எவரெஸ்டில் புதையுண்ட சடலங்கள் பனி உருகுவதால் வெளிப்படுகின்றன

எவரெஸ்ட் மலையில் உள்ள பனிப்பாறைகள் உருகிவருகின்றமையால், அதில் முன்னர் ஏறி இறந்தவர்களின் பனியில் புதைந்த உடல்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன என பயண ஏற்பாட்டு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

எவரெஸ்ட் மலை ஏற முதன் முறையாக முயற்சி மேற்கொண்டதில் இருந்து, சுமார் 300 பேர் வரை அங்கு உயிரிழந்துள்ளனர். .அதில் மூன்றில் இரண்டு பங்கு உடல்கள், பனியில் புதைந்திருக்கின்றன என நம்பப்படுகிறது.



அம்மலையின் சீனப் பக்கத்தில் இருந்து சில உடல்கள் கண்டெடுக்கப்பட்டு வருகின்றன. வசந்த காலம் தொடங்க உள்ளதால், மலை ஏறுபவர்கள், தங்கள் பயணத்தை மேற்கொள்வார்கள்.

உலகின் மிக உயரமான இந்த மலை சிகரத்தில் 4,800க்கும் மேற்பட்டோர் ஏறியுள்ளனர்.

புவி வெப்பமயமாதல் காரணமாக பனிப்பாறைகள் வேகமாக உருகி வருகின்றன. இதனால், இவ்வளவு ஆண்டுகளாக அங்கு உயிரிழந்தவர்களின் பனியில் புதைந்த உடல்கள் வெளியே தென்பட ஆரம்பித்துள்ளன என்கிறார் நேபாள மலையேறுவோர் அமைப்பின் முன்னாள் தலைவரான அங் ஷெரிங்ஷெர்பா.

சமீபத்திய ஆண்டுகளில் உயிரிழந்த இருவரின் உடல்கள் கண்டெடுக்கப்பட்டு கீழே கொண்டுவரப்பட்டன. ஆனால், பனியில் புதைந்து போன, பல ஆண்டுகளுக்கு முன்னால் இறந்தவர்களின் உடல்களும் தற்போது தென்படுகின்றன.. என்றார் அவர் .

# சீனாவில் சனக் கூட்டத்துக்குள் கார் புகுந்ததில் ஆறு பேர் சாவு!

பெய்ஜிங்,மார்ச்23

சீனாவில் மக்கள் கூட்டத்திற்குள் கார் புகுந்ததில் 6 பேர் பலியாகினர். இச்சம்பவத்தை தொடர்ந்து கார்ச் சாரதியை பொலிஸார் சுட்டுக்கொன்றனர்.

சீனாவின் ஹூபே மாகாணத்தில் உள்ள சோயாங் நகரத்தில் நேற்று, மக்கள் கூட்டத்திற்குள் ஒரு கார் பயங்கர வேகத்தில் புகுந்தது. கார் தொடர்ந்து நிற்காமல் அங்கு நின்ற மக்கள் மீது மோதிக்கொண்டு சென்றதில், 6 பேர் பலியாகினர். 7 பேர் படுகாயம் அடைந்தனர். கார் தொடர்ந்து நிற்காமல் சென்றதை யடுத்து, பொலிஸார் காரின் சாரதியைச் சுட்டுக்கொலை செய்தனர். இந்த தகவலை சீன அரசு தொலைக்காட்சி வெளியிட்டுள்ளது.

சமீப காலமாக சீனாவில் இது போன்ற சம்பவங்கள் நடைபெற்று வருகின்றமை அதிகரித்துள்ளது. கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஹூனான் மாகாணத்தில் உள்ள பொதுஇடத்தில் மக்கள் கூட்டத்திற்குள் கார் புகுந்தது. இதில், 11 பேர் பலியாகினர். இதையடுத்து காரின் சாரதியை பொலிஸார் கைது செய்தனர். அவர் வஞ்சக நோக்கத்துடன் திட்டமிட்டு காரை மக்கள் கூட்டத்திற்குள் செலுத்தினார் எனப் பொலிஸார் விசாரணைக்குப் பின்னர் தெரிவித்தனர்.



அதேபோல், நவம்பரிலும் ஆரம்ப பள்ளி வாயில் முன்பு உள்ள தெருவை கடந்து சென்ற பள்ளி சிறார்கள் மீது, கார் மோதியதில் 5 சிறார்கள் பலியாகினர். 19 பேர் காயம் அடைந்தனர். தற்கொலை எண்ணத்தில் சென்றபோது, இந்தத் தாக்குதலை நடத்தினார் என அந்தக் காரின் சாரதி தெரிவித்தார் என்று பின்பு தகவல் வெளியானது.

# 3 ஆவது பெரிய கட்சியின் தலைவராகவே ஜக்மித் சிங் கனடா நாடாளுமன்றத்துக்கு!

## எதிர்க்கட்சித் தலைவராக அல்லர் எனச் சுட்டிக்காட்டு

'கனடா எதிர்க்கட்சித் தலைவராக இந்திய வம்சாவளி வந்த சீக்கியர்' – என்ற தலைப்பில் நேற்றைய காலைக்கதிரின் உலகச் செய்திப் பக்கத்தில் வெளியான செய்தி தவறானது என்பதை றொறன்ரோவில் வசிக்கும் நமது வாசகர் கந்தசாமி கங்காதரன். சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்த விடயங்கள் வருமாறு:–

22.03.2019 காலைக்கதிரில் கனடா எதிர்கட்சித் தலைவராக ஜக்மீத் சிங்' தெரிவானார் என்று இருக்கிறது.

அவர் கனடா நாடாளுமன்றத்தில் மூன்றாவது பெரிய கட்சியின் தலைவர். எதிர்க்கட்சித் தலைவர் அல்லர்.

லிபரல் கட்சி 179 நாடாளுமன்ற உறுப்பினர்களோடு ஆட்சியில் உள்ளது. கொன்சர்வேட்டிவ் 96 உறுப்பினர்களோடு எதிர்க்கட்சியாக உள்ளது. புதிய ஜனநாயகக் கட்சி 40 உறுப்பினர்களோடு இருக்கிறது.

ஜக்மீத் சிங் புதிய ஜனநாயகக் கட்சித் தலைவராக சில மாதங்களுக்கு முன்பே தெரிவானார். இடைத்தேர்தலில் வெற்றி பெற்று அவர் சில நாள்களுக்கு முன்னர்தான் முதற் தடவையாக நாடாளுமன்றம் சென்றார்.

கனடாவின் தேசியக் கட்சியொன்றின் தலைவராக வெள்ளையர் அல்லாத ஒருவர் நாடாளுமன்றம் செல்கின்றமை இதுவே முதற்றடவை.

இத்தகைய பெரிய தவறு காலைக்கதிரில் நான் எதிர்பாராதது.– என்று தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் குறிப்பு :-இந்தச் செய்தித் தவறுக்காக வருந்துகிறோம். (ஆ- ர்)



# இரும்பு மனிதர் அத்வானியின் அரசியல் வாழ்வு அஸ்தமனம்?

பா.ஜ.க. மூத்த தலைவர் அத்வானிக்கு காந்தி நகர் தொகுதியில் மீண்டும் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படவில்லை. அத்தொகுதியில் பா.ஜ.க. தலைவர் அமித் ஷா களமிறங்குகிறார். இதன் மூலம் அத் வானியின் நீண்ட,நெடிய அரசியல் பயணம் முடிவுக்கு வருகிறதா என்ற கேள்வி எழுகிறது.

ஒருகாலத்தில் பா.ஜ.கவின் அசைக்க முடியாத சக்தியாக விளங்கியவர் அத்வானி. வல்லபாய் படேலைத் தொடர்ந்து இரண்டாவது 'இரும்பு மனிதர்' என பா.ஜ.க. தொண்டர்களால் பெருமையுடன் அழைக்கப்படும் அவர், கட்சியில் வளர்ந்து பெரும் தலைவராக உயர்ந்தமை சுவாரஸ்யமானது.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் பிறந்தவர் அத்வானி. நாடு சுதந்திரமடையும் முன்பு, பாகிஸ்தான் பிரிக்கப்பட்டபோது, ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்து, வாழ்ந்த இடத்தையும், பூர்வீகத்தையும் விட்டு உடுத்தியிருந்த உடைகளோடு அடைக்கலம் தேடி இந்தியாவுக்கு வந்த குடும்பங்களில் அத்வானியின் குடும்பமும் ஒன்று. அத்வானி குடும்பம் மும்பை வந்தது.

கராச்சியில் இருக்கும்போதே ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் இணைந்திருந்த அத்வானி, அந்த இயக்கத்தில் முழு நேர ஊழியராகச் சேர்ந்து ராஜஸ்தானுக்குப்



பணி செய்யச் சென்றார்.

1952 வரை ஆர்எஸ்எஸ் அமைப்பில் பணியாற்றிய அவர், அதன் அரசியல் அமைப்பான பாரதிய ஜனசங்கத்தின் பணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டார்.

1957 ஆம் ஆண்டு தேர்தலில் ஜனசங்கத்தின் சார்பில் வென்ற வாஜ்பாய்க்கு உதவியாக அரசியல் பணியில் அடியெடுத்து வைத்தார் அத்வானி. இந்திரா காந்தி நெருக்கடி நிலையை அமுல்படுத்திய போது ஜெயபிரகாஷ் நாராயணன் தலைமையிலான எதிர்ப்பு இயக்கத்தில் ஜனசங்கமும் இணைந்து போராட்டத்தில் பங்கெடுத்தது. அதில் பங்கேற்ற அத்வானி 19 மாதங்கள் சிறையில் இருந்தார்.

இந்திராவை வீழ்த்தி ஆட்சியைப் பிடித்த ஜனதா அரசில் அத்வானி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சரானார். அதன் பிறகு பாஜக தொடங்கப்பட்ட பிறகு வாஜ்பாய்க்குப் பிறகு இரண்டாம் நிலைத் தலைவராக உயர்ந்தார் அத்வானி.

### ரத யாத்திரை

அயோத்தியில் ராமர் கோயில் கட்ட வலியுறுத்தி 1990ஆம் ஆண்டு அத்வானி நடத்திய ரத யாத்திரை அவரை வலிமையான இந்துத்துவா தலைவர் என்ற நிலைக்குக் கொண்டு சென்றது. அதுவரை இல்லாத அளவில் பா.ஜ.கவின் வளர்ச்சி உயர்ந்தது. கூடவே அத்வானியின் பிம்பமும் பா.ஜ.கவில் உச்சத்தை எட்டியது.

1998 மற்றும் 1999ஆம் ஆண்டு தேர்தலுக்குப் பிறகு பா.ஜ.க. தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு மத்தியில் அமைந்ததில் அத்வானியின் பங்கு முக்கியமானது. அந்த அரசை திறம்பட நகர்த்திச் சென்றதில் வாஜ்பாய்க்குப் பெரும் துணையாக இருந்தார் அத்வானி. பா.ஜ.கவில் வாஜ்பாய்க்குப் பிறகு அத்வானி என்ற நிலை ஏற்பட்டது. வாஜ்பாய் காலத்துக்குப் பிறகு பா.ஜ.கவில் முன்னிறுத்தப்படும் தலைவராக அத்வானி உயர்ந்தார்.



வாஜ்பாய், அத்வானிக்குப் பின்னால் நரேந்திர மோடி

வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் பிரதமர் மோடி குஜராத் முதல்வராக இருந்தார். குஜராத் கலவரத்தைத் தொடர்ந்து முதல்வர் நரேந்திர மோடிக்கு எதிராக வாஜ் பாய் கடுமையான நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியபோது, தனது ஆதரவாளரான மோடியைக் காப்பாற்றியதில் அத்வானிக்கு பெரும் பங்கு உண்டு.

அந்தக் காலத்தில் துணை பிரதமராக இருந்த அத்வானி, உடல்நலம் பாதிக்கப்பட்டு வாஜ்பாய் ஒதுங்கிக்கொண்ட நிலையில் 2009ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவின் பிரதமர் வேட்பாளராக முன்நிறுத்தப்பட்டார்.

ஆனால் மக்கள் பா.ஜ.கவை ஆட்சியில் உட்கார வைக்கவில்லை. அத்வானியின் அரசியல் உத்தி எடுபடவில்லை. இதனால் வேறு தளத்தை நோக்கி நகர்ந்தது பா.ஜ.க. அந்தத் தேர்தலுக்குப் பிறகு எதிர்க்கட்சித் தலைவராக சுஷ்மா சுவராஜுக்கு வாய்ப்பு கிடைத்தது.

அத்துடன் அத்வானியின் வசீகரம் குறைந்து விட்டதாகவே அரசியல் பார்வையாளர்கள் கூறுகின்றனர். பாகிஸ்தானை உருவாக்கிய முகமது அலி ஜின்னாவைப் புகழ்ந்தது உட்பட சில தர்மசங்கடமான சூழலும் அவருக்கு இந்துத்துவ ஆதரவாளர்களிடையே இருந்த புகழைக் குறைத்தது.

### மோடியின் காலம்

2014 தேர்தலில் நரேந்திர மோடியை பிரதமர் வேட்பாளராக அறிவிக்க பா.ஜ.க தலைமை தயாரான நிலையில், அதனை ஏற்றுக்கொள்ளவில்லை அத்வானி. பல்வேறு வகைகளில் தனது அதிருப்தியை வெளிப்படுத்தினார். ஆனாலும் பா.ஜ.கவில் அவரது குரல் எடுபடவில்லை. தேர்தலில் வென்று மோடி பிரதமர் ஆனார். அதன் பிறகு தீவிர அரசியலில் இருந்து ஏறக்குறைய விலகிவிட்டார் அத்வானி.

பா.ஜ.கவின் நாடாளுமன்றக் குழு, மார்க்க தர்க் மண்டல் போன்ற அமைப்பில் இருந்தாலும், சம்பிரதாயத்துக்காக மட்டுமே அவர் நிகழ்ச்சிகளில் பங்கேற்று வந்தார். தற்போது காந்தி நகர் தொகுதியில் மீண்டும் போட்டியிடவும் அவருக்கு வாய்ப்பு வழங்கப்படவில்லை. வயதைக் காரணம் காட்டி அவருக்குப் பதிலாக காந்தி நகரில் அமித் ஷா வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளார்.

எட்டுமுறை மக்களவை உறுப்பினராகவும், நான்கு முறை மாநிலங்களவை எம்.பி.யாகவும் பதவி வகித்துள்ள அத்வானியின் நாடாளுமன்றச் செயல்பாடுகள் சிறப்பானவை. தற்போது கூட கடந்த 5 ஆண்டுகளில் மக்களவைக்கு அவரது வருகைப்பதிவு 92 சதவீதம் ஆகும். இந்த மக்களவையில் உறுப்பினர்களின் சராசரி



வருகை 80 சதவீதம்தான். ஆனால், அதைவிடவும் அதிகமான அளவு அத்வானி பங்கேற்றுள்ளார்.

வயது மூப்பு மற்றும் வாய்ப்பு கிடைக்காததால் தற்போதைய மக்களவையில் அவர் அதிக அளவு பேசவில்லை. இருப்பினும் அவரது நாடாளுமன்ற வரலாற்றில் மிகச்சிறப்பான பங்களிப்பை அளித்துள்ளார். வாஜ்பாய் போன்று வசீகரமான பேச்சாற்றல் இல்லாவிட்டாலும், புள்ளி விவரங்களுடன் தகவலைத் தந்து மற்றவர்களைத் திணறடிப்பார்.

குறிப்பாக, பா.ஜ.க. எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது அவையில் கட்சியின் குரலை ஓங்கி ஒலிக்கச் செய்தவர். அவரது மிகச்சிறப்பான கடைசி உரை 2012 ஆம் ஆண்டு மக்களவையில் எதிரொலித்தது. அசாம் மாநிலத்தில் நடந்த வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவந்த அவர் ஆவேச உரை நிகழ்த்தினார்.

பா.ஜ.க. எம்.பி.க்கள் மட்டுமின்றி அப்போது பதவியில் இருந்த காங்கிரஸ் மூத்த தலைவர்கள் பலரும் அத்வானியின் பேச்சை வெகுவாகப் பாராட்டினர். காங்கிரஸுக்குப் போட்டியாக பா.ஜ.கவை முதல் நிலை அரசியல் கட்சியாக வளர்த்தெடுத்த அத்வானியின் பிரதமர் கனவு மட்டும் கடைசி வரை நிறைவேறவில்லை.

மூத்த தலைவர் அத்வானிக்கு மாநிலங்களவை எம்.பி. பதவி வழங்க வேண்டும் என தற்போது பா.ஜ.கவில் ஒரு தரப்பினர் வலியுறுத்துகின்றனர். ஆனால் அதற்கு பா.ஜ.க. தலைமை செவி சாய்க்குமா எனத் தெரியவில்லை.

ஒருவேளை அரசியல் வாழ்க்கையில் இருந்து அத்வானி ஓய்வு பெற்றுவிட்டாலும், அவரது பொதுவாழ்க்கை என்பது அவ்வளவு விரைவாக முடிவுக்கு வராது என்கின்றனர் அவரது ஆதரவாளர்கள்.

போட்டிப் பரீட்சை விசேட வகுப்புக்கள்
நீதிமன்ற முகாமைத்துவ உதவியாளர்
வடி. யாகாரண அருமறுக பரிசோதகர்
பிரிவு - I
சனி 10.00 - 2.00
பிரிவு II
ஞாயிறு 10.00 - 2.00
வரிமதிப்பீட்டாளர்
சனி 8.30 - 1.00
நீதிமன்ற பதிவாளர் சட்டமாணி நுழைவு
சனி 10.00 - 3.30
புள்ளி விபரவியலாளர்
சனி 10.00 - 2.30
SLAS
SLEAS
பிரதி ஞாயிறு 9.00 - 3.30
பிரதி ஞாயிறு 9.00 - 2.00
0766883394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ் ஆஸ்பத்திரிவீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
TAMIL VIRTUAL ACADEMY
B.A. தமிழியல் (Tamilology) சிறப்புப் பட்டத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
- க.பொ.த.உயர்தரத்தில் 3 பாடங்கள் சித்தி (பழைய பாடத்திட்டமாயின் 4 பாடங்கள்)
- உயர் தரத்தில் எந்தப் பிரிவில் பயின்றவர்களும் பட்ட்ப்படிப்பைத் தொடரமுடியும்.
- இலங்கை மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) அங்கீகாரம் பெற்றது.
- கல்வியாண்டில் 50 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- நேர்முகத் தேர்வின் மூலமே மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவர்.
- 2019 கல்வியாண்டுக்கான விரிவுரைகள் ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி ஆரம்பமாகும்.
- பதிவுகளை மேற்கொள்ளும் இறுதித் திகதி 22.04.2019 வரை மட்டும்.

தொடர்புகளுக்கு,
077 8051173
070 305 1173
தமிழ் இணையக் கல்விக்கழகம்,
பாரதி இன்ஸ்ரிரியூட்
காளிகோவில் வீதி, மீசாலை மேற்கு, சாவகச்சேரி.

கருத்தரங்கு தொடர் -④
பிரதி சனிக்கிழமைகளில் மட்டும்
23.03.2019
P. கமல்தாசன் மற்றும் துறைசார் வளவாளர்கள்
K.குமணன்
K. தெய்வேந்திரம்
S.ரங்கன்
Note - நீதிமன்ற பதிவாளருக்கான சட்டம்
S.பரணிதரன் - LLB
இவ் வளவாளர்கள் சனிக்கிழமை மட்டுமே
SLEAS, SLAS, வரிமதிப்பீட்டாளர், வருமான பரிசோதகர், புள்ளிவிவரவியலாளர், நீதிமன்ற பதிவாளர், எழுதுநர், தர்மாசிரியர், LLB போட்டிப் பரீட்சைகளுக்கான வகுப்புக்களும், தனித் தனியாக இடம்பெறும்.
நாவலர் கல்வி நிறுவனம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
077 111 6739
076 166 1986

காலைக்கதிர்
Kalaikkathir





## ஐ.நா. மனித உரிமைச் சபை ஆணையாளரின் அறிக்கையில்

# தமிழ் மக்கள், வடக்கு, கிழக்கு: சொற்பிரயோகங்கள் தவிர்ப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் ஜெனீவா மனித உரிமைச் சபை ஆணையாளர் மிச்செல் பச்சலெட் இலங்கை தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் தமிழ் மக்கள் என்றோ, வடக்கு – கிழக்கு மாகாணம் என்றோ எந்தவொரு வார்த்தைப் பிரயோகங்களும் பயன்படுத்தப்படவில்லை. மாறாக இலங்கை மக்கள் என்றே ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இலங்கையில் சிங்கள – தமிழ் இனப்பிரச்சினையாகக் காண்பித்தால் போர்க்குற்ற விசாரணைக்குப் பதிலாக தமிழ் இன அழிப்பு என்ற அடிப்படையிலான விசாரணையாக மாறி விடலாம் என்ற நோக்கில் ஆணையாளரின் அறிக்கையில் இலங்கை மக்கள் என்ற சொற்பிரயோகம் பயன்படுத்தப்பட்டிருக்கலாமென ஜெனீவாவில் உள்ள தமிழ்ப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

ஆணையாளரின் அறிக்கையில் தமிழ் மக்கள் என்று கூறப்படாமை தொடர்பாக ஜெனீவாவுக்குச் சென்று முகாம் அமைத்துச் செயற்படும் தமிழ்ப் பிரதிநிதிகள் எவருமே சுட்டிக்காட்டவில்லை.

முப்பது ஆண்டுகால அஹிம்சைப் போராட்டம் மேலும் முப்பது ஆண்டுகால ஆயுதப் போராட்டம் என்று சுமார் எழுபது ஆண்டுகளுக்கும் மேலான தமிழர்களின் விடுதலைப் போராட்டத்தை வெறுமனே மனித உரிமைப் பிரச்சினையாகவும், இலங்கை மக்களின் பிரச்சினையாகவும் எடுத்துக் காட்டுவதற்காகவா ஜெனீவா மனித உரிமைச் சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்றும் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்ளும் தமிழரசுக் கட்சியை மையப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அது தொடர்பாக எதுவுமே பேசவில்லை எனக் கூறப்பட்டது.

மாறாக ஆணையாளரின் அறிக்கையின் பிரகாரம் இலங்கை அரசாங்கத்துக்கு மேலும் இரண்டு வருட கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமைக்கு, கூட்டமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

ஆணையாளரின் அறிக்கையிலேயே தமிழ் மக்கள், வடக்கு கிழக்கு என்ற சொற் பிரயோகங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ள நிலையில் ஜெனீவா மனித உரிமைச் சபையிடம் இருந்து தமிழ் மக்கள் நீதியை எதிர்பார்க்க முடியாதென தமிழ்ப் பிரதிநிதியொருவர் தெரிவித்தார்.

இலங்கையில் தமிழினப்படுகொலை நடந்தது என்பதை மறைத்து போர்க் குற்றம், மனித உரிமை மீறல் போன்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்து விசாரணைகளை நடத்துவதன் மூலம், சிங்கள – தமிழ் பிரச்சினையை வெறுமனே மனித உரிமைப் பிரச்சினையாகக் காண்பிப்பதே மனித உரிமைச் சபையின் நோக்கமா என்ற கேள்விகள் கூட எழாமலில்லை.

ஆணையாளரின் அறிக்கையிலேயே தமிழ் மக்கள், வடக்கு கிழக்கு என்ற சொற் பிரயோகங்கள் மூடி மறைக்கப்பட்டுள்ள நிலையில் ஜெனீவா மனித உரிமைச் சபையிடம் இருந்து நீதியை எதிர்பார்க்க முடியுமா?

> இலங்கையில் தமிழினப்படு கொலை நடந்தது என்பதை மறைத்து போர்க் குற்றம், மனித உரிமை மீறல் போன்ற குற்றச் சாட்டுக்களை முன்வைத்து விசாரணைகளை நடத்துவதன் மூலம், சிங்கள – தமிழ் பிரச்சினையை வெறுமனே மனித உரிமைப் பிரச்சினையாகக் காண்பிப்பதே மனித உரிமைச் சபையின் நோக்கமா என்ற கேள்விகள் கூட எழாமலில்லை.

இதேவேளை, போர்க்குற்ற விசாரணையை நடத்த சர்வதேச நீதிபதிகளை உள்வாங்கும் வகையில் கலப்புமுறைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறும், ஏற்கனவே வழங்கப்பட்ட வாக்குறுதிகளை தாமதிக்காமல் நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜெனீவா மனித உரிமைச் சபையின் ஆணையாளர் மிச்செல் பச்சலெட் இலங்கை அரசாங்கத் திடம் கோரியுள்ளார்.

ஜெனீவா மனித உரிமைச் சபையின் கிளைக் காரியாலயம் ஒன்று கொழும்பில் அமைக்கப்பட வேண்டுமென்றும் ஆணை யாளர் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமைச் சபையின் அமர்வு இந்த மாதம் முதல் வாரத்தில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. இலங்கை தொடர்பான பிரேரணை ஒன்றை பிரித்தானியா உள்ளிட்ட பல சர்வதேச நாடுகள் மனித உரிமைச் சபையின் அமர்வில் சமர்ப்பித்துள்ளன.

பிரேரணை குறித்து கடந்த இரண்டு நாள்களாக விவாதம் இடம்பெற்றது. இதன்போது இலங்கை குறித்த தனது கருத்தை வெளியிட்ட ஆணையாளர் மிச்செல் பச்சலெட் அரசாங்கத்தின் மீது காரசாரமான விமர்சனங்களை முன்வைத்தார்.

ஆனாலும் இலங்கை சார்பான அரச பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திலக் மாரப்பன ஆணையாளரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ள விடயங்களை ஏற்க முடியாதெனக் கூறியுள்ளார்.

குறிப்பாக சர்வதேச நீதிபதிகள் அடங்கிய கலப்புப் பொறிமுறை ஒன்றை உருவாக்கி அதனடிப்படையில் போர்க் குற்ற விசாரணை நடத்துவதற்கான சட்ட ஏற்பாடுகள் இலங்கை அரசமைப்பில் இல்லையென அமைச்சர் திலக் மாரப்பன கூறியுள்ளார்.

விதப்புரைகளின் பிரகாரம், கலப்புப் பொறிமுறை ஒன்றை உருவாக்குவதானால் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும் அதற்கு

### ஜெனீவாவில் தமிழ்ப் பிரதிநிதிகள் வாய்மூடி மௌனம்

இலங்கை நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை உறுப்பினர்களின் வாக்குகள் பெறப்பட வேண்டும் என்றும் கூறினார்.

அத்துடன் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்றும் அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்தார். ஆனாலும் அமர்வில் கலந்துகொண்ட பிரித்தானியா, கனடா போன்ற நாடுகள் இலங்கை அரசாங்கம் மனித உரிமைச் சபையின் தீர்மானத்தை நடைமுறைப் படுத்த வேண்டுமென வலியுறுத்தியுள்ளன.

நன்றி: கூர்மை

# இலங்கையில் இந்திய முதலீடு; எதிர்ப்பு இல்லை என்கிறது சீனா

பீஜிங், மார்ச் 23

அம்பாந்தோட்டையில் இந்தியா முதலீடுகளைச் செய்வதற்குச் சீனா எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் தெரிவித்துள்ளார்.

பீஜிங்கில் நாளாந்த செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அம்பாந்தோட்டைக்கு அருகே இந்திய நிறுவனம் ஒன்று, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அமைக்க 3.85 பில்லியன் டொலரை செலவிடவுள்ளது. இது இலங்கைக்கு மிகப் பெரிய முதலீடு. அம்பாந்தோட்டைத் துறைமுகம், பாதை மற்றும் அணைத் திட்டத்தின் ஒரு முக்கியமான ஒத்துழைப்புத் திட்டமாகும்.

இந்த நிலையில், இந்தியாவின் முதலீடு சீனாவின் முதலீடுகளுக்குச் சவாலாக இருக்குமா? இந்த நேரத்தில் இலங்கையில் இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையே ஒரு மூலோபாயப் போட்டி இருக்கிறதா? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குச் சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜெங் சுவாங் பதிலளிக்கையில்,

நீங்கள் குறிப்பிட்ட தகவலைப் பற்றி நான் இன்னமும் அறியவில்லை. அதுபற்றி ஆராய வேண்டும்.

ஆனாலும், சீனாவும் இலங்கையும் பல்வேறு துறைகளில் ஆழமான, விரிவான ஒத்துழைப்பைக் கொண்டுள்ளன. அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டம் ஒரு நல்ல விடயம்.

இருதரப்புக்கும் பயனளிக்கும் இந்த திட்டத்தின் மூலம் சிறிலங்காவின் பொருளாதாரத்துக்கும், சமூக அபிவிருத்திக்கும் சீனா உதவியுள்ளது. சீனாவின் உதவியை இலங்கை மதித்துப் பாராட்டுகிறது.

அதேவேளை, இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான, பரஸ்பர ஒத்துழைப்பை அல்லது, இலங்கைக்கும் ஏனைய தரப்புகளுக்கும் இடையிலான அத்தகைய ஒத்துழைப்பைச் சீனா வெளிப்படையாக அணுகுகிறது.

இலங்கையின் அபிவிருத்திக்கு, இந்தியாவுடனும் ஏனைய தரப்புகளுடனும் இணைந்து செயற்படச் சீனா தயாராக இருக்கிறது.

வெளியுறவு விவகாரங்களில், நீங்கள் கற்பனை செய்வதை விட சீனா இன்னும் பரந்த மனப்பான்மையைக் கொண்டுள்ளது – என்றார். (ஐ)

# மேலும் சில கடற்படை அதிகாரிகளுக்கு 11 இளைஞர்கள் கடத்தலுடன் தொடர்பு!

## சி.ஐ.டியினர் நீதிமன்றுக்கு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 23

2009 ஆம் ஆண்டு தலைநகர் கொழும்பில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில், அந்தக் காலப் பகுதியில் கடற்படையின் தென் மாகாணத் தளபதி ஜெயந்த பெரேரா, கடற்படைப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் ஆனந்த குருகே ஆகியோரும் அறிந்திருந்தனர்.

இந்தத் தகவல் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கொழும்பு நீதிவான் நீதிமன்றத்துக்கு நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என அப்போதைய கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் வசந்த கரன்னகொட உள்ளிட்ட 14 கடற்படை அதிகாரிகள் – சிப்பாய்கள் வரை இதுவரை அடையாளப்படுத்தப்பட்ட நிலையில் மேலும் இரண்டு கடற்படை அதிகாரிகளின் பெயர்களைக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று வெளிப்படுத்தியுள்ளனர்.

2008 - 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பின் தெஹிவளை, கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் 5 தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் வெள்ளை வானில் கடத்திச் சென்று காணாமல் ஆக்கப்பட்டனர்.

இது தொடர்பிலான வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது. இதுவரை கடற்படை அதிகாரிகள் உட்பட 13 கடற்படையினர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் பலர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். சிலர் விளக்கமறியலில் உள்ளனர்.

இந்த வழக்கு கொழும்பு மேலதிக நீதிவான் சலனி பெரேரா முன்னிலை யில் நேற்று முன் தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. நேவி சம்பத் உள்ளிட்ட சந்தேகநபர்கள் மன்றில் முன்னிலையானார்கள்.

இந்தச் சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் பெரும் கொள்கைகள் பிரிவின் பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் மேலதிக அறிக்கை ஒன்றை மன்றுக்கு முன்வைத்தார்.

2009ஆம் ஆண்டு காலப்பகுதியில் தென் மாகாண கடற்படைத் தளபதியாகச் செயற்பட்ட ஜயந்த பெரேரா மற்றும் கடற்படையின் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளராகச் செயற்பட்ட ரியல் அட்மிரல் ஆனந்த குருகே உள்ளிட்ட உயர்மட்ட அதிகாரிகள் சிலர் இந்தக் கடத்தல் தொடர்பில் அறிந்திருந்தனர்.

இது தொடர்பில் சாட்சியாளர்களிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வாக்குமூலங்களின் அடிப்படையில், விரிவான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று அந்த அறிக்கையில் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிசாந்த சில்வா மன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

லெப்டினன்ட் கமாண்டர் ஹெட்டியாராச்சி முதியன்சலாகே சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி எனும் நேவி சம்பத்தை எதிர்வரும் 4ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்ட கொழும்பு மேலதிக நீதிவான் சலனி பெரேரா வழக்கை அன்றைய தினம் வரை ஒத்திவைத்தார். (ஐ)

## போர்க்குற்ற ஆதாரங்கள் பொன்சேகா கைகளில்!



கொழும்பு, மார்ச் 23

சில இராணுவ அதிகாரிகள் சட்டவிரோத நடவடிக்கைகளை மேற்கொண்டமைக்கான சாட்சியங்கள் தன்னிடம் இருக்கின்றன என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வெள்ளைக்கொடிச் சம்பவத்துடன் தொடர்புடைய குரல் பதிவுகள் தன்னிடம் இருக்கின்றன என்றும் தேவையான நேரத்தில் அவற்றை முன்வைக்கத் தயாராக உள்ளன என்றும் குறிப்பிட்டார்.

மேலும் இராணுவ அதிகாரிகள் மேற்கொண்ட சட்டவிரோதமான நடவடிக்கைகள் சம்பந்தமான காணொளிகளும் தன்னிடம் இருக்கின்றன எனவும் அவர்களுக்கு தண்டனை வழங்கப்பட வேண்டும் எனவும் பொன்சேகா மேலும் கூறினார். (ஐ)

# ஐ.நாவின் புதிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை

## காணாமற்போனோரின் உறவுகள் கொதிப்பு

ஜெனீவா, மார்ச் 23

ஐ.நாவின் புதிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என கிளிநொச்சி மாவட்ட காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் சங்கத்தின் இணைப்பாளர் லீலாதேவி தெரிவித்தார்.

ஜெனீவா மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்வில் பங்கேற்ற பின்னர் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை அரசு இந்தத் தீர்மானத்தை வரவேற்கும் என்றால், அது அவர்களுக்குச் சாதகமாக வந்துள்ளது. எனவே அவர்கள் அதனை வரவேற்கத்தான் வேண்டும்.

எங்கள் பிரதிநிதிகளைத் துணையாகக்கொண்டு இந்தத் தீர்மானத்தை அவர்கள் தாங்கள் நினைத்தவாறு முடித்துள்ளார்கள். எனவே அவர்கள் அதனை வரவேற்கத்தான் வேண்டும்.

எனினும் பாதிக்கப்பட்டுள்ள நாங்கள் இந்த புதிய தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை – என்றார். (ஐ)



## மாவா போதைப்பொருளை வைத்திருந்தவருக்குச் சிறை

யாழ்ப்பாணம், மார்ச் 23

கஞ்சா கலந்த மாவா போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றத்துக்கு இளைஞர் ஒருவருக்கு 2 மாதங்கள் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அத்துடன், குற்றவாளி 10 ஆயிரம் ரூபா தண்டப் பணத்தைச் செலுத்தவேண்டும் என உத்தரவிட்ட மன்று, அதனைச் செலுத்தத் தவறின் மேலும் 2 மாதங்கள் சிறைத் தண்டனையை அனுபவிக்க நேரிடும் எனவும் சுட்டிக்காட்டியது.

கஞ்சா கலந்த மாவா போதைப்பொருள் சரை ஒன்றை உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் 20 வயதுடைய இளைஞர் ஒருவரைக் கோப்பாய் பொலிஸார், யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை முற்படுத்தினர்.

சந்தேகநபர் தன் மீதான குற்றச்சாட்டை ஒத்துக்கொண்டு குற்றவாளி எனக் கூறினார்.

அதன்போதே யாழ்ப்பாணம் நீதிமன்ற மேலதிக நீதிவான் காயத்திரி சைலவன் தண்டனைத் தீர்ப்பை வழங்கினார். (ஐ)

## சர்வதேசக் கண்காணிப்பு இலங்கை மீது அவசியம்

### மனித உரிமை கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 23

இலங்கையில் மீண்டும் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு சர்வதேசத்தின் கண்காணிப்பு அவசியம் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஐ.நா மனித உரிமைகள் கவுன்ஸில் அமர்வுகள் தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மனித உரிமைகள் கண்காணிப்பகம் இவ்வாறு கூறியுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

2015ஆம் ஆண்டு ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட யோசனையின்படி சில விடயங்களில் இலங்கை அரசு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. எனினும் பல விடயங்களில் காலதாமதம் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பாகக் காணாமல் போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டபோதும் அதன் அடுத்த கட்ட நடவடிக்கைகள் ஸ்தம்பித்துள்ளன.

போர்க்குற்றப் பொறுப்புக்கூறல் விடயத்தில், சர்வதேச நீதிபதிகள் என்ற விடயத்தில் இன்னும் இணக்கம் ஒன்று எட்டப்படவில்லை.

இந்தநிலையில் ஜெனீவா யோசனையை நடைமுறைப்படுத்த இலங்கை அரசுக்கு மீண்டும் வாய்ப்பு ஒன்று வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. எனினும் தொடர்ந்தும், பொறுப்புக்கூறலில் காலதாமதம் இருக்கக்கூடாது.

அதற்குப் பதிலாக இலங்கை தமது பொறுப்பை நிறைவேற்ற சர்வதேசத்தின் கண்காணிப்பு, ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கள அவதானிப்பு சாட்சியத் திரட்டல், நீதி மற்றும் பொறுப்புக் கூறல் பொறிமுறை என்பன அவசியம் – என்றுள்ளது. (ஐ)

## கோட்டாவைச் சந்தித்தார் ஆறுமுகம் தொண்டமான்

கொழும்பு, மார்ச் 23

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான், முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப்பேச்சு நடத்தியுள்ளார்.



மருத்துவ சிகிச்சைக்காகக் கடந்த திங்கட்கிழமை ஆறுமுகம் தொண்டமான் இந்தியாவுக்குச் செல்ல முன்னர் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் குறித்து இதன்போது பேசப்பட்டதாகவும் காங்கிரஸின் முழுமையான ஆதரவு கோட்டாபயவுக்கே வழங்கப்படுமெனவும் இதன்போது ஆறுமுகம் உறுதியளித்துள்ளார் எனத் தெரிகிறது. (ஐ)

## துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானவர் மரணம்

கொழும்பு, மார்ச் 23

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான பெலியத்த பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவர் கபில பிரியதர்ஷன அமரகோன் (வயது 44), காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் சிகிச்சைப்பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை மரணமடைந்தார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான அவர், தனது வீட்டின் அறையிலிருந்த வேளை கடந்த 20 ஆம் திகதி காலையில் இனந்தெரியாத நபர்களினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் படுகாயமடைந்திருந்தார். (ஐ)

# மன்செஸ்டர் யுனைடெட் அணி ரசிகர்களுக்கு விசேட சலுகை!



இங்கிலாந்தின் பிரபல கழக அணியாக திகழும், மன்செஸ்டர் யுனைடெட் அணி தங்களது இரசிகர்களுக்கு விசேட சலுகையொன்றை வழங்கவுள்ளது.

தங்களது இரசிகர்களுக்கு குறைந்த விலையில் ரிக்கெட்டுகளை வழங்க மன்செஸ்டர் யுனைடெட் அணி தீர்மானித்துள்ளது.

இதற்கமைய, யூரோ சாம்பியன்ஸ் லீக் உதைபந்து தொடரின் காலிறுதி ஒன்றில் பார்சிலோனா அணி - மன்செஸ்டர் யுனைடெட் அணிகள் மோதுகின்றன.

முதல் லெக் மன்செஸ்டர் யுனைடெட் அணிக்குச் சொந்தமான ஓல்ட் டிராபோர்டில் விளையாட்டரங்கில் அடுத்த மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்த போட்டிக்காகவே மன்செஸ்டர் யுனைடெட் அணி, தங்களது இரசிகர்களுக்கு குறைந்த விலையில் ரிக்கெட்டுகளை வழங்க தீர்மானித்துள்ளது.

இரு அணிகளுக்கிடையிலான இரண்டாவது லெக் போட்டி, பார்சிலோனாவிற்குச் சொந்தமான நவு கேம்ப் மைதானத்தில் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது. இரண்டு அணி இரசிகர்களும் போட்டிகளை பார்க்க இங்கிலாந்துக்கும், ஸ்பெயின் நாட்டிற்கும் செல்வார்கள்.

இரண்டாவது லெக் போட்டியை பார்ப்பதற்காக மன்செஸ்டர் யுனைடெட் இரசிகர்களுக்கு பார்சிலோனா 4610 ரிக்கெட்டுக்கள் ஒதுக்கியுள்ளது. ஆனால் ஒவ்வொரு டிக்கெட்டிற்கும் 102 பவுண்ஸ்கள் அதாவது 134 டொலர்களை விலை நிர்ணயம் செய்துள்ளது. இந்தத் தொகை மிகவும் அதிகம். அதனால் போட்டியை புறக்கணிப்போம் என்று மன்செஸ்டர் யுனைடெட் இரசிகர்கள் கொந்தளித்தனர்.

இதனால் முதல் லெக் போட்டியை ஓல்ட் டிராபோர்ட் வந்து பார்க்க வரும் பார்சிலோனா இரசிகர்களுக்கான ரிக்கெட் விலையை மென்செஸ்டர் யுனைடெட் அதிரடியாக உயர்த்தியுள்ளது. அதில் கிடைக்கும் வருமானத்தை நவு கேம்ப் செல்லும் இரசிகர்களுக்கான டிக்கெட்டிற்கு குறைந்த விலையில் வழங்க முடிவு செய்துள்ளது.

# கேன் வில்லியம்சன் சாதனை!



நியூஸிலாந்து கிரிக்கெட் அணியின் தலைவரான கேன் வில்லியம்சன், அந்நாட்டு கிரிக்கெட் சபையால் வழங்கப்படும் உயரிய விருதான சர் ரிச்சர்ட் ஹாட்லீ விருதை மூன்றாவது முறையாக வென்று சாதித்துள்ளார்.

ஆண்டுதோறும் சிறப்பாக விளையாடும் வீரர்களுக்கு நியூசிலாந்து கிரிக்கெட் சபை விருதுகள் வழங்கி கௌரவிக்கின்றது.

இதில் மிக உயரிய விருதான சர் ரிச்சர்ட் ஹாட்லீ விருதை இந்த முறை கேன் வில்லியம்சன் வென்றுள்ளார்.

ஏற்கனவே அவர் இரண்டு முறை இந்த விருதை வென்றுள்ளார். இதன் மூலம் மூன்று முறை சர் ரிச்சர்ட் ஹாட்லீ விருதை பெற்ற முதல் வீரர் என்ற பெருமையை பெற்றுள்ளார். மற்றொரு வீரரான ரோஸ் டெய்லர் இரண்டு முறை இந்த விருதைப் பெற்றுள்ளார்.

இந்த தலைமுறையின் தலை சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக கருதப்படும் கேன் வில்லியம்சன், கடந்த ஆண்டில் மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் சிறப்பாக விளையாடியதற்காக மற்றும் அணியை வழிநடத்தியதற்காக இந்த விருதை வென்றுள்ளார்.

கேன் வில்லியம்சன் தலைமையில் நியூஸிலாந்து அணி, மேற்கிந்தியத்தீவுகள் அணி, இலங்கை, இங்கிலாந்து, பாகிஸ்தான் மற்றும் பங்களாதேஷ் அணிகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை கைப்பற்றியுள்ளது. அத்தோடு டெஸ்ட் போட்டிகளில் 20 சதங்களை விளாசிய பெருமையையும் அவரையே சாரும்.

கடந்த ஆண்டில் கேன் வில்லியம்சன் டெஸ்ட் போட்டிகளில் 925 ஓட்டங்களும், ஒருநாள் போட்டியில் 838 ஓட்டங்களும், ரி - 20 கிரிக்கெட்டில் 332 ஓட்டங்களும் அடித்துள்ளார்.

இவை தவிர டெஸ்ட் போட்டிகளுக்கான சிறந்த வீரர் விருதையும் கேன் வில்லியம்சன் வென்றார். இது அவரது மூன்றாவது விருதாகும்.

அவர் ஒன்பது போட்டிகளில் 925 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். ட்ரெண்ட் போல்ட் மற்றும் நெய்ல் வாக்னர் ஆகியோர் இரண்டு முறை விருதுகளை வென்றனர்.

மேலும், ஒருநாள் போட்டிகளுக்கான சிறந்த வீரர் விருதை ரோஸ் டெய்லர் பெற்றுக்கொண்டார். அவர் கடந்த ஆண்டு 1232 ஓட்டங்களை குவித்தார். சராசரி 82.13 ஆகும்.

அத்தோடு, ஒருநாள் போட்டிகளில் 20 சதங்களை விளாசிய முதல் நியூஸிலாந்து வீரர் என்ற மைல்கல்லையும் அவரைப் பதித்துள்ளார்.

இதுதவிர ரி - 20 போட்டிகளுக்கான சிறந்த வீரர் விருதை கொலின் முன்ரோ பெற்றுக்கொண்டார் அவர் கடந்த ஆண்டு 16 போட்டிகளில் விளையாடி 634 ஓட்டங்களைப் பெற்றார். சராசரி 42.26 ஆகும்.

# ஐ.பி.எல். தொடர் இன்று ஆரம்பம்

இந்தியாவில் நடைபெறும் கிரிக்கெட் திருவிழாவான ஐ.பி.எல். ரி - 20 லீக் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்த நிலையில், இத்தொடரில் விளையாடும் அணிகளில் சில மாற்றங்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாக சில வீரர்கள் உபாதைக் காரணமாக அணியிலிருந்து விலகியுள்ளனர்.

இதில் குறிப்பாக சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் இளம் வேகப்பந்து வீச்சாளரான லூங்கி இங்கிடி தொடரிலிருந்து விலகியுள்ளார்.

தென்னாபிரிக்க வீரரான லூங்கி



இங்கிடி, இலங்கை அணிக்கெதிரான ஐந்தாவது ஒருநாள் போட்டியின் போது உபாதைக்குள்ளானார். ஆகையால் அவரை ஓய்வில் இருக்குமாறு மருத்துவக் குழு அறிவுறுத்தியுள்ளது.

மேலும், சன்ரைசஸ் ஹைதராபாத் அணியின் சகலதுறை வீரரான சகிப் ஹல் ஹசன், உபாதையிலிருந்து அவதிப்பட்டு வருவதால், அவர் இத்தொடரில் பங்கேற்பது சந்தேகத்திற்கிடமாகியுள்ளது.

பங்களாதேஷ் வீரரான சகிப் ஹல் ஹசன், தற்போது விரலில் ஏற்பட்ட காயத்திற்கு சத்திர சிகிச்சை மேற்கொண்டு ஓய்வில் இருக்கின்றார்.

இதற்கிடையில், அவரது காயம் குணமடைந்து, உடற்தகுதியை நிரூபித்த பின்னரே அவர் அணியில் இடம்பெறுவார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிக்குள் புதிதாக உள்வாங்கப்பட்ட இளம் வேகப்பந்து வீச்சாளரான என்ரிச் நோர்ட்ஜே உபாதைக் காரணமாக அணியிலிருந்து விலகியுள்ளார்.

தென்னாபிரிக்க வீரரான என்ரிச் நோர்ட்ஜே, இலங்கை அணிக்கெதிரான தொடரில் தோள் பட்டையில் உபாதைக்குள்ளாகியுள்ளதால், இத்தொடரிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

இதற்கு முன்னதாக கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் இடம்பிடித்திருந்த இளம் வேகப்பந்து வீச்சாளர்களான ஷிவம் மவி, கம்லேஷ் நகர்கோடி ஆகியோர் காயம் காரணமாக அணியிலிருந்து விலகியிருந்தனர்.

அவர்களுக்கு ரஞ்சி கிண்ண தொடரில், சிறப்பாக பந்து வீசிய கேரளாவைச் சேர்ந்த சந்தீப் வாரியர் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளார்.

நடப்பு ஆண்டுக்கான ஐ.பி.எல். ரி - 20 லீக் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. இத்தொடர் எதிர்வரும் மே மாதம் 19ஆம் திகதி வரை நடைபெற உள்ளது. இதில் மொத்தம் 17 போட்டிகள், 8 நகரங்களில் நடைபெறுகின்றன.

இத்தொடரின் முதல் போட்டியில், நடப்பு சம்பியன் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும், றோயல் செலஞ்சர்ஸ் பெங்களூர் அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள 11 ஐ.பி.எல். தொடர்களில் ராஜஸ்தான் றோயல்ஸ், டேக்கன் சார்ஜஸ், சன்ரைசஸ் ஹைதராபாத் ஆகிய அணிகள் தலா ஒருமுறையும், கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி இரண்டு முறைகளும் சென்னை சுப்பர் கிங்ஸ் மற்றும் மும்பை இந்தியன்ஸ் அணிகள் தலா மூன்று முறைகளும், சம்பியன் கிண்ணங்களை ஏந்தியுள்ளன.

# போட்டி தடையிலிருந்து தப்பினார் ரொனால்டோ




சம்பியன்ஸ் லீக் தொடரில் சுற்று 16 ஆட்டத்தின் இரண்டாம் கட்ட ஆட்டத்தில் ரொனால்டோவின் ஹற்றிக் கோல்களின் உதவியுடன் யுவான்டஸ் அணி 03:00 என்ற கோல் கணக்கில் அத்லெட்டிகோ அணியை வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

இவ் வெற்றியை முறையற்ற வகையில் ரொனால்டோ கொண்டாடியமை மீதான விசாரணை முடிவை ஐரோப்பிய ஒன்றிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு வெளியிட்டது.

முதலாம் கட்ட ஆட்டத்தில் அத்லெட்டிகோ முகாமையாளர் முறையற்ற விதத்தில் வெற்றியை கொண்டாடியமைக்காக 20 ஆயிரம் யூரோவை தண்டமாக விதித்தது போன்று ரொனால்டோ மீதும் போட்டித்தடை எதுவுமின்றி அதே தொகையை விதித்து தீர்ப்பளித்தது ஐரோப்பிய ஒன்றிய உதைபந்தாட்டக் கூட்டமைப்பு. இதனால் ரொனால்டோ ரசிகர்களும் யுவாண்டஸ் அணியினரும் மிகுந்த உற்சாகமடைந்துள்ளனர்.

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜெனீவாவில் மனித உரிமைகள் கவுன்ஸிலில் உரையாற்றிய -ஐ.தே.கவைச்சேர்ந்த-வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன கூறியவை அனைத்தையும் நிராகரிக்கிறோம், அது தொடர்பில் எங்கள் கடுமையான எதிர்வினையை வரும் நாள்களில் நீங்கள் காணலாம் என நேற்று முன் தினம் லண்டனில் வைத்து அவர் கருத்து வெளியிட்டிருந்தார்.

இதனையடுத்து நாடு திரும்பிய கையோடு நேற்று அவர் சபையில் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தில் தற்போது நடைபெற்றுவரும் வரவு - செலவுத் திட்டத்தில் விவசாய அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டுக் குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 40ஆவது கூட்டத் தொடரில் இலங்கை அரசுக்கு மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளமை தொடர்பில் தமிழ் மக்கள் மத்தியில் தவறான பிரகாரம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இலங்கை அரசு இழுத்தடிப்புச் செய்வதால்தான் மேலும் கால அவகாசம் வழங்கப்படுவதாகக் கூறப்படுகின்றது. ஆனால், உண்மை அதுவல்ல. இலங்கை மீதான சர்வதேசக் கண்காணிப்பை மேலும் இரண்டு வருடங்களுக்கு நீடிக்கும் வகையிலேயே தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்துக்கு இலங்கை அரசும் இணை அனுசரணை வழங்கியுள்ளது. குறிப்பிட்டதொரு கால அட்டவணையின் கீழ் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, வெளிநாட்டு நீதிபதிகள் உள்ளடங்களான நீதிமன்ற பொறிமுறையை ஏற்கின்றோம் என்று மூன்றாவது முறையும் எழுத்துமூல உத்தரவாதத்தை வழங்கியுள்ளது இலங்கை.

எனவே, சர்வதேச நீதிபதிகளை அனுமதிப்பதற்கு அரசமைப்பில் இடமில்லை என வெளிவிவகார அமைச்சர் ஜெனீவாவில் விடுத்த அறிவிப்பு தவறானது - முறையற்றது.

மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைக்காக வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிமன்றத்தை அமைப்பதை இலங்கையின் அரசமைப்பு தடைசெய்யவில்லை.

நாட்டின் நீதிப் பொறிமுறையில் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்குவதற்கு, 2015 இல் நீதி அமைச்சராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ இணங்கியிருந்தார். அவரது இணக்கத்தின் அடிப்படையில்தான், 30/1 தீர்மானத்தில் கையெழுத்திடப்பட்டது.

2013ஆம் ஆண்டு முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்ற விசாரணைப் பிரேரணை கொண்டு வரப்பட்டபோது, அப்போது, எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்த விஜயதாஸ ராஜபக்ஷ வெளிநாட்டு நீதிபதிகளை விசாரணைகளில் இணைத்துக்கொள்ளக் கோரும் தனிநபர் பிரேரணையைச் சமர்ப்பித்திருந்தார்.

தமிழ்மக்கள் முற்றிலும் வெளிநாட்டு நீதிபதிகளை உள்ளடக்கிய கலப்பு நீதிப் பொறிமுறையைத் தான் கேட்கின்றார்கள்.

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்ட [illegible]னத்தை நடைமுறைப்[illegible]துவதற்கு இலங்கை அரசும் [illegible] நடவடிக்கை எடுக்கதவறும் பட்சத்தில், சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் முன்கொண்டு செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படும். அல்லது முழுமையான சர்வதேச நீதிப் பொறிமுறையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ)

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிருப்தியாளர்களையும் திருப்திப்படுத்தும் வகையில் தேசிய அரசொன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, அமைச்சரவையை விஸ்தரிப்பதற்கான விசேட பிரேரணையொன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கத் தயாராகி வருகிறார் எனத் தெரியவருகின்றது.

அரசமைப்பின்படி அமைச்சர்களின் எண்ணிக்கையை 30 பேருக்கு மேல் அதிகரிக்கத் தேசிய அரசு இருக்கவேண்டும். அமைச்சரவையை அதிகரிக்கும் பிரேரணைக்கு குறைந்தபட்சம் நாடாளுமன்றப் பெரும்பான்மை ஆதரவு இருக்கவேண்டும்.

இந்தப் பின்னணியில் சுதந்திரக் கட்சியில் இருந்தபடி ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஆதரவை வழங்கும் உறுப்பினர்கள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியில் அமைச்சுப் பதவி கிடைக்காதவர்கள் ஆகியோரை திருப்திப் படுத்தும் வகையில் அமைச்சரவையை விஸ்தரிப்பதற்கும் அதற்கான விசேட பிரேரணையை நாடாளுமன்றத்தில் முன்வைக்கவும் பிரதமர் தீர்மானித்துள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

அமைச்சரவை அதிகரிப்பு தொடர்பில் கடந்த வாரம் முக்கிய சந்திப்பொன்றை நடத்திய பிரதமர் ரணில், தேசிய அரசு தொடர்பான தனது யோசனைக்கு ஜனாதிபதி தரப்பில் இருந்து பெரிய எதிர்ப்பு வராதென சூசகமாகத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ரிஷாத் பதியுதீனுக்கு திறன் அபிவிருத்தி தொழிற்பயிற்சி அமைச்சை வழங்குவதற்கு முன்னர் ஜனாதிபதி கடும் எதிர்ப்பை வெளியிட்டார். ஆனால் அண்மையில் அதனை வழங்க அவர் அனுமதித்திருந்தார். இப்போது இதனை அவர் எதிர்க்க வாய்ப்பில்லை என்று இந்தக் கூட்டத்தில் கருத்து வெளியிட்டுள்ளார் ரணில்.

அமைச்சரவை விஸ்தரிக்கப்படும்போது ஏற்கனவே கூடுதல் பொறுப்புக்களை கொண்டுள்ள அமைச்சர்களின் பதவிகள் மீளப் பெறப்படுமெனத் தெரிகிறது.

இதற்கிடையில் அமைச்சரவை உறுப்பினர்களை அதிகரிக்கும் நோக்கில் மட்டும் தேசிய அரசு அமைவது குறித்து ஆளுங்கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர் எனக் கூறப்படுகின்றது. (ஐ)

## கோட்டாவைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'நாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

பொது அணியினர் ஜனாதிபதித் தேர்தலுக்கு எவ்வாறான வேட்பாளரைக் களமிறக்கினாலும் அவர் நிச்சயமாக வெற்றி பெறப்போவதில்லை.

கோட்டாவால் 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளை பெற்றுக்கொள்ள முடியாது. தமிழர்கள் அவருக்கு ஆதரவை வழங்க மாட்டார்கள்.

தமிழ்மக்கள் உள்ளிட்ட அனைத்து இன மக்களின் விருப்பைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வேட்பாளரையே நாங்கள் இம்முறை வேட்பாளராகக் களமிறக்குவோம் - என்றார். (ஐ)

## மாரப்பனவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையின் முதலாவது பிரதமரான தேசபிதா டி.எஸ். சேனாநாயக்கவின் 67 ஆவது நினைவஞ்சலிக் கூட்டம் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தேசபிதா டி.எஸ். சேனாநாயக்கவின் கொள்கைவழியில்தான் நாம் பயணிக்கின்றோம் என்பது நேற்றுகூட (21) உறுதிப்படுத்தப்பட்டது.

சர்வதேச நீதிபதிகளையும் உள்ளடக்கிய கலப்பு நீதிமன்ற பொறிமுறை அவசியம் என ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் ஜெனீவாத் தொடரில் கோரிக்கை விடுத்திருந்தார். எனினும், இலங்கை ஜனநாயக நாடு. சுயாதீன நீதிமன்றக் கட்டமைப்பு இருக்கின்றது எனச் சுட்டிக்காட்டி மேற்படி கோரிக்கையை வெளிவிவகார அமைச்சர் நிராகரித்தார்.

அத்துடன், ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் செயலகமொன்றை இலங்கையில் அமைக்கவேண்டியதில்லை. மனித உரிமை ஆணையாளர் எந்நேரத்தில் வேண்டுமானாலும் எமது நாட்டுக்கு வரலாம் என்றும் எமது நாட்டின் வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார். இதன் மூலம் இலங்கையின் சுயாதீனத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டது.

அதேவேளை, படையினரைச் சர்வதேசப் போர்க்குற்ற நீதிமன்றத்துக்குக் கொண்டுசெல்ல இடமளிக்கப்படாது. எவராவது தவறிழைத்திருக்கும் பட்சத்தில் உள்நாட்டில் வழக்கு தொடுத்து நடவடிக்கை எடுக்கலாம். எமது அரசு படையினரை தண்டிக்கவில்லை. மாறாக ஐ.நா. அமைதிப்படைக்கே ஆட்களை அனுப்பியுள்ளோம் - என்றார்.

## யாழ். நகரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் யாழ். வின்சர் சந்தியில் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குச் சற்றுத்தொலைவில் மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

அரியாலை மணியந்தோட்டத்தைச் சேர்ந்தவரின் ஓட்டோ இவ்வாறு எரிந்தது.

சம்பவத்தில் ஓட்டோவின் மேற்தளம், ஆசனங்கள் என்பன முற்றாக எரிந்தன. அந்தப் பகுதியில் நின்றவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

வடகைக்கு அமர்த்தி வந்தவர்களை இறக்கிவிட்டு வரும் போதே சம்பவம் இடம்பெற்றது. ஓட்டோ தீப்பிடித்ததால் சாரதியின் கைப்பை (பேர்ஸ்) தீயில் எரிந்ததால் அவரின் அடையாள அட்டை, சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளிட்ட முக்கிய ஆவணங்கள் எரிந்து நாசமாகின என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ஒன்பது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அம்பாந்தோட்டை, மொனராகலை ஆகிய மாவட்டங்களில் கடும் வெப்பம் நிலவவுள்ளது.

எனவே, மக்கள் அவதானமாக செயற்பட வேண்டும் என்றும், அதிக வெப்பத்துடனான வானிலை நிலவும் சந்தர்ப்பங்களில் அதிக நீரை பருகுமாறும் நிழலான இடங்களில் தரித்திருக்குமாறும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது. (ஐ)

## சு.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் பொதுவெளியில் கருத்து வெளியிடக்கூடாதென ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கண்டிப்பான உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

பொதுவெளியில் சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் பொறுப்பின்றி கருத்துக்களை வெளியிடுவதாக ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சித் தலைவர்கள் பலர் ஜனாதிபதியிடம் செய்த முறைப்பாட்டையடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர உட்பட்ட சிலர் ஜனாதிபதி வேட்பாளர் விவகாரம் குறித்து அண்மையில் பல கருத்துக்களை தெரிவித்திருந்த நிலையில், இந்தக் கருத்துக்கள் அரசியல் கூட்டணி அமைப்பது உட்பட்ட பல விடயங்கள் பாதிக்கலாமென இந்தக் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## இரு வேறு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒருவருமே விபத்துக்களில் உயிரிழந்துள்ளனர்.

அல்லைப்பிட்டியில் யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை பிரதான வீதியில் இடம்பெற்ற டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இளம் குடும்பத் தலைவர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது என ஊர்காவற்றுறை பொலிஸார் தெரிவித்தனர்.

அளவெட்டி கிழக்கைச் சேர்ந்த நிதர்ஷன் (வயது-21) என்பவரே உயிரிழந்தார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இளம் குடும்பத் தலைவர், டிப்பா வாகனத்துடன் மோதி விபத்து இடம்பெற்றது என்றும் படுகாயமடைந்த இளைஞன் யாழ். போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும்போது உயிரிழந்தார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் துண்டிச் சந்தியில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டு ஏற்பட்ட விபத்தில் வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணியளவில் இடம்பெற்றது என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தார்.

நல்லூர் யமுனா ஏரியைச் சேர்ந்த சேது அன்ரனி (வயது-79) என்பவரே உயிரிழந்தார்.

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதுண்டதில் விபத்து ஏற்பட்டது. 49சிசி மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் சம்பவத்தில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார்.

சம்பவத்தையடுத்து மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் கைதுசெய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-07)

## சீனாவிடமிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவின் எக்சிம் வங்கியின் மூலம், இந்தக் கடன் வழங்கப்படவுள்ளது.

நிதி அமைச்சில் நேற்று நடந்த நிகழ்வில், நிதி அமைச்சின் செயலர் சமரதுங்கவும், சீன எக்சிம் வங்கி சார்பில், இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் ஷியுவானும் இந்த உடன்பாட்டில் கையெழுத்திட்டனர்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலைத் திட்டத்தின் முதற்கட்டமான, கடவத்த தொடக்கம் மீரிகம வரையான பகுதியில் பணிகளை மேற்கொள்வதற்கு, 1.164 பில்லியன் டொலர் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

மொத்த செலவில் 85 வீத தொகைக்கான கடனைச் சீன எக்சிம் வங்கி வழங்கவுள்ளது. (ஐ)

## நிறைவேற்றதிகார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முறைமையை முற்றாக இல்லாதொழிக்கக் கோரும் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்ட வரைவு தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன், ஜே.வி.பி. நேற்று பேச்சு நடத்தியது.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியிலுள்ள பிரதமர் அலுவலகத்தில் சுமார் 45 நிமிடங்கள் நடைபெற்ற சந்திப்பில் அநுர குமார திஸாநாயக்க, விஜித ஹேரத், நளிந்த ஜயதிஸ்ஸ ஆகிய எம்.பிக்கள் ஜே.வி.பியின் சார்பில் கலந்துகொண்டிருந்தனர்.

பிரதமருடனான சந்திப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித்த ஹேரத் எம்.பி.,

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்பதே ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கை ரீதியிலான தீர்மானமாகவுள்ளது. எனினும், இது தொடர்பில் ஐக்கிய தேசிய முன்னணியிலுள்ள பங்காளிக்கட்சிகளுடனும் பேச்சு நடத்த வேண்டியுள்ளது.

அத்துடன், 20 ஆவது திருத்தச்சட்டமூலத்தில் தேர்தல் முறைமை, 13ஆவது திருத்தச்சட்ட வரைவுடன் தொடர்புபட்ட விடயங்களும் இருக்கின்றன. இவை குறித்து ஆராய்ந்து விரைவில் முடிவு அறிவிக்கப்படும் என்று ஐக்கிய தேசியக்கட்சி தரப்பில் எமக்கு அறிவிக்கப்பட்டது.

எதிர்காலத்தில் ஏனைய கட்சிகளுடனும் பேச்சு நடத்தப்படும். மூன்று வாரகாலப்பகுதிக்குள் இது விடயத்தில் இறுதி கட்டத்தை எட்டுவதற்கு எதிர்பார்க்கின்றோம். - என்றார்.

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் ஜேவிபி தீவிரமாக இறங்கியுள்ளது.

இதற்கமைய எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரை தனித்தனியாகச் சந்தித்து, '20' ஐ ஆதரிக்குமாறு ஜே.வி.பியினர் கோரிக்கை விடுத்தனர்.

இதன் மற்றுமொரு அங்கமாகவே பிரதமர் தலைமையிலான ஐக்கிய தேசியக்கட்சியுடன் நேற்று சந்திப்பு நடைபெற்றது. (ஐ)

## சு.கவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்ட நடவடிக்கைகளை அவர் முன்னெடுக்க உள்ளார்.

இன்று சனிக்கிழமை யாழ். வரும் தயாசிறி ஜயசேகர வரலாற்றுப் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்கு காலை 9 மணிக்குச் சென்று விசேட பூசை வழிபாடுகளில் ஈடுபடவுள்ளார்.

அதனைத் தொடர்ந்து யாழ். தட்டாதெருச் சந்திக்கு அருகாமையிலுள்ள லக்சுமி பிளாசா மண்டபத்தில் நடைபெறும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். - கிளிநொச்சி மாவட்டங்களுக்கான மறுசீரமைப்புச் செயற்திட்ட மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் யாழ். மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அங்கஜன் இராமநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த மாநாட்டில் கட்சி மறுசீரமைப்புச் செயற்திட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-07)

# வடக்கின் விளையாட்டுத்துறை கலாசாரத்தின் குறியீடு அமரர் கப்டன் என். சோமசுந்தரம்

## அவரின் நினைவாக யாழ் இந்து மைதானத்தில் இன்று ரி - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டி இறுதியாட்டம்


கப்டன் என். சோமசுந்தரம் (1933 - 2015)

வடக்கின் கடந்த ஐம்பது ஆண்டு கால விளையாட்டுத்துறைக் கலாசாரத்தின் குறியீடு என்றால் அது கப்டன் சோமசுந்தரம் எனலாம் (Symbol of Sports Culture of North). யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் விளையாட்டுத்துறை ஆளுமையின் குறியீடும் அவர்தான். நமது ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் பிதாமகர்களுள் அவரும் முக்கியமானவர்.

எழுபத்தியிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் எமது கழகம் எமது பிரதேச இளைஞர்களால் ஸ்தாபிக்கப்பட்ட போது அதன் ஸ்தாபக உறுப்பினர்களுள் ஒருவர் சோமசுந்தரம். அன்று தொடக்கம் 2015 இல் தாம் மறையும் வரை ஜொலிஸ்ரார் கழகம் என்ற கட்டமைப்பின் ஆணிவேராகவும், மையவிசையாகவும் அவரே விளங்கினார்.

எமது கழகத்தைப் பொறுத்தவரை அவர் செயலாளர், உபதலைவர், தலைவர் என்று பல பதவிகளை வகித்திருந்தாலும் எமது கழகம் அவரைச் சுற்றியே இவ்வளவு நாளும் இயங்கி யது என்பது நிதர்சனமான உண்மை.

ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, கொக்குவில் இந்துக் கல்லூரி, பரமேஸ்வராக் கல்லூரி ஆகியவற்றின் மாணவர்கள், பழைய மாணவர்களை ஒன்றிணைத்தே எமது கழகம் ஸ்தாபிக்கப்பட்டு இயங்கி வந்தது. சுமார் 40 ஆண்டுகாலம் இந்நிலையே நீடித்தது. அப்போதெல்லாம் இந்த முத்தரப்பினையும், எமது பிரதேச இளைஞர்களையும் அன்பு ரிமையுடன் ஒன்றிணைக்கும் வல்லாளராகக் கப்டன் சோமசுந்தரம் திகழ்ந்தார். அதனால் ஜொலிஸ்ரார் மிளிர்ந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி யின் கடந்த மிலேனியத்தின் கடைசி மூன்று தசாப்த காலமும் கோலோச்சிய விளையாட்டுத்துறை வீரர்கள் - பெரும்பாலும் அனைவரும் - கப்டன் சோமசுந்தரத்தினால் அந்தந்த விளையாட்டுத் துறைகளில் புடம் போடப்பட்டவர்களாய் இருப்பர் என்பது நிச்சயம். அப்படி புடம் போட்ட - மறக்கவொண்ணாத - யாழ் இந்து பழைய மாணவர்கள் தங்களது பிரித்தானிய பழைய மாணவர் சங்கம் மூலம் யாழ் இந்து விளையாட்டுத் துறை தந்தையான கப்டன் சோம சுந்தரத்தை நினைவு கூர எடுத்த சுற்றுப் போட்டியே இது. அவரது பெயரில் இந்தக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியை - அதுவும் ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் - நடத்துவது மிக மிகப் பொருத்தமானதாகும்.

யாழ்ப்பாண கிரிக்கெட்டைப் பொறுத்தவரை இரண்டு முக்கிய விடயங்களுக்குக் கால்கோள் இட்ட பிதாமகர் சோமசுந்தரம்.

யாழ்ப்பாணத்தில் விளையாட்டுக் கழகங்களுக் கிடையில் முதன் முத லில் வன்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியை ஆரம்பித்தது நமது ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம்தான். 1983இல் - 36 ஆண்டுகளுக்கு முன்னர் - கப்டன் சோமசுந்தரத்தின் முழுப் பங்களிப்பு, வழிகாட்டுதல்களுடன் அது நடந்தேறியது. அப்படி ஒரு சுற்றுப் போட்டியை நடத்தும் முதல் எண்ணம் தோன்றியதே அவரிடமிருந்து தான். அன்று தொடக்கம் 2015 இல் அவர் மறையும் வரை ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகத் தின் சகல கிரிக்கெட் சுற்றுப் போட்டிகளும் அவரைச் சுற்றியே கட்டவிழ்ந்தன.

அடுத்து - யாழ்ப்பாண மாவட்ட கிரிக்கெட் சங்கம் உருவாக்கப்பட்டமை. தாம் உருவாக்கிய அடுத்த தலைமுறை இளைஞர்களையும் கொண்டு அந்தச் சங்கம் அமைக்கப்படுவதற்கு வழி காட்டுதலாகவும், தூண்டுகோலாகவும் பிதா மகராகவும் இருந்தவர் அவரே. அது மாத்திரமல்ல அந்தச் சங்கம் தடுமாற்றம் கண்ட ஆரம்பத்தில் அதன் தலைமை நிர்வாகத்தைப் பொறுப்பேற்று, அதனைத் தூக்கிநிறுத்தியவரும் அவரே. அதனால் தேசிய மட்டத்தில் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அமைப்பின் நிர்வாகிகளினால் கூட பெரிதும் மதிக்கப்பட்ட - போற்றப் பட்ட - கிரிக்கெட் நிர்வாகியாக அவர் மிளிர்ந்தார்.

தன்னுடைய பாடசாலை நாள்களில் குறுந்தூர ஓட்டம், ஹொக்கி போன்றவற்றிலே அதிக ஈடுபாடு காட்டி சாதனைகளைப்புரிந்தகப்டன் சோமசுந்தரம் பின்னாளில் சிறந்த விளையாட்டுத்துறை நிர்வாகியாகவும் விளங்கினார்.

யாழ் மாவட்ட பாடசாலைகள் விளையாட்டுச் சங்கத்தைப் பெருவெற்றிகளோடு அவர் நிர்வகித்த மாண்பு இன்னும் வியந்து போற்றப்படுகின்றது.

தன்னுடைய ஆளுமையால் வடக்கின் பல்வேறு விளையாட்டுத் துறைகளைச் செழுமைப்படுத்தி, அத்துறைகளையும் அதன் வீரர்களையும் உயர்வேற்றி விட்ட பெருந்தகையாளனுக்கு - விளையாட்டுத்துறை நிர்வாகிக்கு - வருடாவருடம் தொடரும் இச் சுற்றுப்போட்டியை அவர் பெயரில் ஆரம்பித்து 'சல்யூட்' செய்கிறது ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம். *






**யாழ்ப்பாணத்தின் மூத்த விளையாட்டுத்துறை நிர்வாகி அமரர் கப்டன் என். சோமசுந்தரம் நினைவாக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார் விளை யாட்டுக் கழகம் நடத்தும் 'ரி - 20' கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 1 மணி முதல் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுகின்றது.**

**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பிரித்தானிய பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவில் வருடம் தோறும் நடத்தப்படவிருக்கும் இந்தச் சுற்றுப் போட்டித் தொடரின் முதலாவது தொடர் இதுவாகும்.**

**தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உதவிப் பதிவாளரும் முன்னாள் கிரிக்கெட் வீரரும், கிரிக்கெட் மத்தியஸ்தருமான திரு.ப.முருகவேளும், திருமதி. முருகவேளும் இன்றைய நிகழ்வில் பிரதம விருந்தினர்களாகப் பங்கு பற்றுகின்றனர்.**

**இன்றைய இறுதியாட்டத்தில் திருநெல்வேலி கிரிக்கெட் கழகமும், ஏ.பி.விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.**







இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 23.03.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.